1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele { grams: "CATHOLIC PRESS, JAFFNA.
phone: No. 100.

# சத்தியவேதபாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு அனி மாதம் 10-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 22-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

காற்று இடையிடையே புசலைப் போன்று உரமாகவீசிவருகின்றது. அதனால் வெயில்அகோரம் சாந்தியாகின்றது. மப்புமந்தாரம் காணப்படினும் மழையில்லை.

### புதிய கவர்னர் - ஜெனறல்

தற்போது நிதிமந்திரியாராய் இருந்துவருகிறவரான சேர் ஒலிவர் குணதிலக அவர்கள் இம்மாதம் 30-ந் திகதியன்று தமதுமந்திரிபதவியை இராசினாமாச் செய்வார். அதன்மேல் இலங்கையின் முதல் கவர்னர்-ஜெனறலாக வருகிற ஆடி மாதம் 17-ந் திகதி இராணி மாளிகைசெல்லுமுன் சிறுகலீவு எடுத்துக்கொள்வார்.

### சிகறெற் புகையிலைச்செய்கை

அரசாங்க கமத்தொழிற்பகுதியானது கடந்த நான்குவருடங்களாக நடத்திவந்த பரிசோதனையிலிருந்து, யாழ்ப்பாணக்குடாநாட்டின் சிலகிராமங்களிலே வியாபாரநிமித்தமாகச் சிகறெற்புகையிலையைப் பாக்கச் செய்கை பண்ணலாமெனக் கண்டறிந்திருக்கிறது. நீர்வேலியில்தான் இப்பரிசோதனை நல்லவெற்றியை அளித்திருக்கிறது. அடுத்தபடியாக வேம்பிராய், உடுவில், தெல்லிப்பழை ஆகியகிராமங்களில் வெற்றியளித்துள்ளது. சென்ற போகத்திலே நீர்வேலியில்விளைந்த 1,10,568 றாத்தல்புகையிலையும் உலர்த்தியபின் நல்லமணங்குணமுள்ளதாய், நன்குஎரியக்கூடியதாய் இருக்கக்கண்டறியப்பட்டது. ஏனையகிராமங்களில் விளைந்த 79,066 றாத்தல்புகையிலையும் உலர்த்தியபின் இதன் எரியுந்தன்மை அவ்வளவு திருப்திகரமாய் இருக்கவில்லை.

### கண்வைத்திய சிகிச்சை

மானிப்பாயிலுள்ள கிறீன்வைத்தியசாலையிலே வாரந்தோறும் செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் காலை 8-30 மணிமுதல் 9-30 மணிவரையில் கண்வைத்தியசிகிச்சை நடத்துதற்கான ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. லண்டன்நகரிலே கண்பற்றிய நோய்களிலே விசேஷபயிற்சிபெற்றுள்ளவரும், அத்தகைய நோய்களுக்குச் சிகிச்சைசெய்வதில் சிறந்தஅநுபவமுடையவருமான டக்றர் ஈ. பி. அசரையா அவர்களே இந்தவைத்தியத்திற்குப் பொறுப்பாளியாவர்.

### மூன்றுநாளைக்கு ஒருமரணம்

இலங்கையிலே சென்ற 1953-ம் ஆண்டில் இலங்கை றெயில்பாதையிலே சராசரியாக மூன்றுநாளைக்கு ஒருவர் வீதம் இறந்திருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டிலே 104 பேர் றெயின் வண்டிகளினால் கொல்லப்பட, 91 பேர் பலமானகாயம் அடைந்துள்ளனர். முந்திய 1952-ம் ஆண்டில் கொல்லப்பட்டவர்கள் 76 பேர்மாத்திரமே. தவிர, சென்ற ஆண்டிலே றெயின்வண்டிகளால் நெரியுண்டு இறந்தமாடுகள், எருமைகள் ஆகியன 269.

### முத்துச்சம்பா வருகிறது

பிரான்சியஇந்தியாவிலுள்ள காரைக்காலிலிருந்து 500 தொன் நிறம்முத்துச்சம்பா அரிசி சமீபத்திலே இலங்கை வந்து சேரவிருக்கிறது. இந்த அரிசி இங்குவந்துசேர்ந்ததும் கூப்பன் அரிசிக்குப் புறம்பாகவே விற்பனைசெய்யப்படவிருக்கிறது. தற்போது கூப்பனுக்குப் புறம்பான அரிசி கொத்துஒன்று 90 சதமாக விற்பனைசெய்யப்பட்டுவந்தபோதிலும் இந்தச்சம்பாஅரிசி இன்னும் கூடுதலானவிலைக்கு விற்கப்படும். அதற்குக்காரணம் இதனைத்தருவிப்பதில் கூடுதலானசெலவு ஏற்பட்டிருப்பதேயாகும்.

### பாதுகாப்பற்ற கிணறு

மகாவெலைவாசியான அப்துல் மஜீட் என்பவரின் ஆறுவயதுப்பிள்ளைஒன்று அவரதுவளவில்இருந்த பாதுகாப்பற்ற கிணற்றில்விழுந்து நீரில்மூழ்கி இறந்துவிட்டது. தனதுகிணற்றைத் தகுந்த பாதுகாப்பாக வைத்திருக்கவில்லையென்று குற்றஞ்சாட்டிப் பாணந்துறைப்பொலிசர் அவர்மீது வழக்குத் தொடர்ந்தனர். தான் குற்றவாளியென்று அப்துல் மஜீட் ஒப்புக்கொண்டார். அப்போது அவருக்காகஏற்பட்ட வழக்கறிஞர் அவருக்காகப் பரிந்துபேசி, தனதுபிள்ளை இறந்தமையாலே — அதாவது அப்பிள்ளையை இழந்தமையாலே அவர் தக்கவாறு தண்டிக்கப்பட்டுவிட்டார்; அதனால் இரக்கம்காட்ட வேண்டுமென்று நீதிபதியைக் கேட்டுக்கொண்டார். நீதிபதி மஜீட்டைஎச்சரித்து விடுதலைசெய்தனர்.

### வடமாகாணப்புதியஏசன்றர்

தற்போது வடமாகாண அரசாட்சி ஏசன்றராய் இருந்துவருகிறவரான திரு. பி. ஜே. ஹட்சன் அவர்கள் வருகிற ஆடிமாதத்திலே தமதுபதவியிலிருந்து இளைப்பாறவிருக்கின்றார். அதனால் இவரிடமாகக் காணிஅபிவிருத்தித் தலைவராகக் கடமைபார்த்துவருகிறவரான திரு. எம். ஸ்ரீகந்தா அவர்கள் வடமாகாண அரசாட்சி ஏசன்றராக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். இவர் காலஞ்சென்ற பிரபல கஸ்தூரிமுத்துக்குமாரு வைத்தியர்அவர்களின் மருகராவர்.

### கடற்பன்றியில் கருணை

யாழ்ப்பாணத்தில் பிடிக்கப்பட்டு விற்பனைக்காகச் சென்றவாரம் கொழும்புக்கு றெயின்வண்டிமூலம் அனுப்பிவைக்கப்பெற்ற பெரியகடற்பன்றி ஒன்று நல்லகாலத்துக்கு உயிர் பிழைத்துப் புறக்கோட்டை மீன்சந்தை போய்ச் சேரலாயிற்று. என்றாலும் அதன் உயிரைப் போக்குவதற்காக அதனுடைய வாய்நிறைய உருளைக்கிழங்குகள் திணிக்கப்பட்டிருந்தன. இந்தநிலைமையிலே அதனைக் கண்ட சனங்கள் அதற்கு உயிர்ப்பிச்சையளித்து, அதனைத்திரும்பவும் கடலில் கொண்டுபோய்விடத் தீர்மானித்தார்கள். எல்லோருமாகச் சேர்ந்து 220 ரூபா சேகரித்து அதனை வாங்கியவருக்குக் கொடுத்தனர். பின்னர் அந்தக் கடற்பன்றி காலிபேஸ் கடற்கரை கொண்டுபோய்ச் சேர்க்கப்பெற்றுக் கடலில்விட உயிர்பிழைக்க விடப்படலாயிற்று.

### பிரதமரின் யாழ்ப்பாணவிஜயம்

இலங்கைப்பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலஅவர்கள் நிகழும் ஆனி மாதம் 26-ம் 27-ம் 28-ம் 29-ந் திகதிகளிலே யாழ்ப்பாணத்தொகுதிகளில் சுற்றுப்பிரயாணஞ் செய்யவிருக்கிறாரென அறிகின்றோம். ஐக்கியதேசியக் கட்சியின் பிரதமகாரியதரிசியான சேர் உக்வத்தை ஜயசுந்தரா அவர்கள் பாராளுமன்ற யாழ்ப்பாணப் பிரதிநிதிகள், கிராமச்சங்கதலைவர்கள், மற்றுஞ் சிலபிரமுகர்களுக்குச் சென்றவாரம் அனுப்பியுள்ள ஓர்சுற்றுநிருபத்திலிருந்து இதுதெரியவருகிறது. பிரதமமந்திரிபதவி ஏற்றபின்னர் சேர்ஜோண் கொத்தலாவலஅவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்வது இதுவே முதன்முறையாகும்.

### பிரயாணிகள்சங்க யோசனை

யாழ்ப்பாண றெயில்வேப்பிரயாணிகள்சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் தெல்லிப்பழையிலே சென்றவாரம் கூடியபோது, அதில் "றெயில்வேப்பகுதிக்கு வருடந்தோறும் திரும்பத் திரும்ப ஏற்பட்டுவரும் நஷ்டத்தைக் குறைக்கும் நோக்கமாகப் பஸ்சலாரிலும் குறைந்ததாய் மூன்றாம்வகுப்புச் சலார்விகிதத்தைக் குறைக்கவேண்டுமென்றும், ஒன்றரைவிகிதச்சலாரில் போகவரக்கொடுக்கும் றிற்றேண் திக்கெற் வழங்கும்முறையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் ஆலோசனைகூறி ஓர்பிரேரணை நிறைவேறியிருக்கிறது.

### கவர்னர்—ஜெனறலின் பயணம்

இலங்கைக் கவர்னர் – ஜெனறல் சோல்பறிபிரபு வருகிறஆடிமாதம் 17-ந் திகதி "ஒறேன்ஸே" எனும் கப்பல் வழியாகக் கொழும்பிலிருந்து பிரித்தானிக்குப் பயணமாகவிருக்கின்றார். அன்றுதினமே புதிய கவர்னர்-ஜெனறல் சேர் ஒலிவர் குணதிலக அவர்கள் தம்புதியபதவியைக் கையேற்று இராணி மாளிகையில் வசிக்கச்செல்வார். சோல்பறிபிரபு 1949-ம்ஆண்டு ஆடி மாதத்திலே இலங்கைக்கவர்னர்-ஜெனறலாக இங்குவந்தார்.

### மதுவிலக்கும் சாராயமும்

வடஇலங்கை மதுவிலக்குச் சங்கத்தின் வருடாந்தபொதுக்கூட்டம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் சென்றசனிக்கிழமை நடந்தேறியது. டக்றர் சி. குருசாமி அவர்கள் அதற்குத் தலைமைவகித்துப் பேசியபோது: வடஇலங்கை மதுவிலக்குச் சங்கத்தின் முயற்சியாலே யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்துவந்த எட்டுச் சாராயத்தவறணைகளில் ஆறும் கடந்த இருவருடங்களுக்கிடையில் சனசம்மதிமூலம் மூடப்பட்டுவிட்டன; மதுபானபாவனையின் கெடுதியைப்பற்றிப் பொதுமக்களிடையே தொடர்ந்து பிரசாரம்செய்யப்படுமானால், சாராயம் அடியோடு இல்லாது ஒழிந்துவிடும்; மாவரிபற்றிய எங்கள்கருத்தை மாவரிக் கம்மிஷனரிடம் தெரிவித்திருக்கிறோம். மாவரிமுறையைத் தொடர்ந்து கையாளுவதால் தீங்குவிளையும்என்பதே எங்கள் அபிப்பிராயம்; சனசம்மதிகேட்டு மக்களின்உணர்ச்சியைத் தெரிந்து [illegible] அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வோமெனக் கூறினர்.

## ஞானப்பூச்செண்டு ?

### இருபுதிய மந்திரிமார்

வருகிறஆடிமாதம் 1-ந் திகதியன்று திரு. எம். டி. எச். ஜயவர்த்தன அவர்கள் நிதிமந்திரியாகவும், மேஜர் மொண்ரேகு ஜயவிக்கிரம அவர்கள் போக்குவரத்து-பகிரங்கவேலை மந்திரியாகவும் விசுவாசப்பிரமாணஞ்செய்து பதவியேற்கவிருக்கின்றார்கள். இவ்விருவரும் தற்போது அப்பதவிகளை வகித்திருக்கும் மந்திரிமார்களின் பாராளுமன்ற காரியதரிசிகளாய் இருந்துவருகின்றார்கள். மேஜர் ஜயவிக்கிரம அவர்கள் மந்திரியாராக நியமனம் பெற்றிருப்பதோடு சேர் ஜோண் கொத்தலாவல அவர்களின் மந்திரி சபையிலுள்ள மந்திரிமார்களின்தொகை பதினான்காகும்.

### தாமரைப்பூ பறிக்கச்சென்றவர்

சலாபத்தைச்சேர்ந்த முந்தல்எனும் கிராமத்திலே அமரசிங்கி அந்தோனி எனும் 22 வயதுடையவாலிபர் சென்ற வியாழக்கிழமை ஓர்குளத்தில் நீராடுகையில் சிலதாமரைப்பூக்கள் பறிப்பதற்காகத் தண்ணீரின்கீழ் நீந்திச்சென்றபோது அவருடைய பாதங்கள்இரண்டும் தாமரைக்கொடிகளில் சிக்கிக்கொள்ளவே, அவர் வெளியேவரமாட்டாமல்போயினர். தண்ணீருக்குமேல் அவர் மிதவாததைக்கண்டு அவருடன் நீராடிய சிநேகிதர்ஒருவர் உதவிக்கு ஆட்களைக் கூவியழைத்தார். பிறகு மற்றவர்களின் துணையோடு சென்று தேடிப்பார்த்தபோது அவர்சரீரம் சேற்றில் புதைந்திருக்கக்கண்டு மேலே இழுத்தெடுத்தார். அதற்குள் அந்தோனியின் உயிர் பிரிந்துபோய்விட்டது.

### விபத்துக்குள்ளான பிள்ளைகள்

மகாரகாமையைச்சேர்ந்த நவின்ன எனும் கிராமத்திலே சென்ற புதன்கிழமைகாலை திரு. எம். எஸ். எம். பக்கீர் என்பவரின் புதல்விகளான 5 வயதுடைய சித்திஜறுபா, 3 வயதுடைய சித்திமருமாஎனும் பிள்ளைகள் இருவரும் தங்கள்வீட்டின்முன்பாக விளையாடிக்கொண்டிருந்தபோது, காணி அபிவிருத்திப்பகுதி லொறிஒன்று வீதியைவிட்டுவிலகி அவர்களது வீட்டில்போய் மோதவே அப்பிள்ளைகள் இருவரும் அதனுள் அகப்பட்டு இறந்துபோனார்கள். வேறிருபிள்ளைகள் அருமையாகத் தப்பிக்கொண்டார்கள்.

### ஆஸ்பத்திரிபற்றிய ஆட்சேபம்

மூளாயிலே புன்னாலை-வட்டுக்கோட்டைவீதியில் சயரோகஆஸ்பத்திரி ஒன்றை மூளாய்க் கூட்டுறவுஆஸ்பத்திரிச் சங்கம் ஸ்தாபிப்பதை ஆட்சேபித்துச் சென்றசனிக்கிழமைஇரவு மூளாய்வாசிகளின் கூட்டம்ஒன்று நடைபெற்றது. அதிலே அக்கிராமத்தின் தென்பகுதியில் சயரோகஆஸ்பத்திரி அமைக்கும் யோசனை ஆட்சேபிக்கப்பட்டு, அப்பகுதிமக்களின் ஆரோக்கியத்துக்கும், சமூகமுன்னேற்றத்துக்கும், கமத்தொழில் நலன்களுக்கும் அதுபெரும்இடையூறாய் இருக்குமென்று எடுத்துக்காட்டப்பட்டு, அதனால்இந்தயோசனையைக் கைவிடுமாறு கேட்கப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புத மாற்றம்

[ ரம்போலா மாஸ்கரேனஸ் ]

அவன் கொழுத்தகுடிகாரன். பதினாறுஆண்டுகள் மதுப் பழக்கத்தில் மூழ்கியிருந்தான். மதிஇழந்து, நிதிஇழந்து, மானம் இழந்து, ஞானமிழந்து மதுஅரக்கனின் அடிமையாக அலைந்து திரிந்தான். குடித்தான், குடித்தான், குடித்துக்கொண்டேயிருந்தான். அப்புறம் அவன்வாழ்க்கையில ஒரு திடீர்மாற்றம். இந்த அற்புதமாற்றம் எப்படிஉண்டானது?

மற் தல்போத்தைப் பாலியத்தில்அறிந்தவர்கள் அவனது எதிர்காலத்தில் நம்பிக்கை கொள்ளவில்லை. ஒரு அசட்டுச் சோம்பேறிஅவன். அட்டகாசத்தில் வல்லவன். தலையிடி தாய்க்கு. தந்தைக்கு வேதனை ஊற்று. ஆசிரியர்க்குத் துன்பத்தின்தோற்றுவாய். அவன் யாருக்குப்பணிவான்? எவர் அவனுக்குப் புத்திகற்பிப்பது? அவனது கெட்டபழக்கங்களின் சிகரம் குடிப்பழக்கம்.

மற் 1856-ம் ஆண்டு டபிளின் மாநகரில் ஓருபாரியகுடும்பத்தில் பிறந்தான். பெற்றோர் நல்லவர்கள். உத்தமகத்தோலிக்கர். கடவுளையும், அவரது திருத்தாயாரையும் உருக்கமாய் நேசித்துத் தங்கள்பிள்ளைகளைக் கத்தோலிக்க விசுவாசத்தில் கருத்தாய் வளர்த்தார்கள். ஆனால், மற்றின் நடத்தை அவர்களுக்குப் பெருத்த ஏமாற்றம் அளித்தது. கத்தோலிக்கனாகப் பிறந்தால்மட்டும் போதுமா? கத்தோலிக்கனாகச் சிறக்கும்படி வீரவாழ்வு வாழவேணடுமே. மற் பையனாக இருந்தபோது அவனுக்கு வேதத்தில் ஊன்றிய பற்றில்லை. காலைமாலை அவன் செபஞ் சொன்னதெல்லாம் ஏதோ ஒப்பாசாரத்திற்காகவே. செபமாலை செபித்ததெல்லாம் குடும்பவழக்கம் என்பதற்காகவே. அவனுக்குப் பாடசாலையில்வெறுப்பு. எண்ணியநேரத்தில் எடுப்பான் ஓட்டம் வகுப்பைவிட்டு. பன்னிரண்டாம்வயதில் படிப்பிற்குப்போட்டான் முற்றுப்புள்ளி. தானே ஒருவேலை தேடிக்கொண்டான்.

என்னவேலை? மதுக்கடையில் கூலிவேலை. முதல்சம்பாத்தியமே குடிக்குச்சமர்ப்பணம். சம்பாத்தியமெல்லாம் குடியில் கரைந்து, இரவு நிறைவெறியோடுதான் வீட்டுக்குத்திரும்புவான். குடும்ப செபத்திற்கு நேரத்தோடு வருவதில்லை. வந்தாலும் சேர்ந்துசெபிக்க முடிவதில்லை. இராச்செபத்தில் ஈடுபட முடியாதபடி மதுமயக்கம். காலையில்எழுந்ததும் ஆத்திர அவசரமாக வேலைக்குப் புறப்படத்தான் நேரமிருக்கும்.

மதுத்தேட்டம் அவன் உடம்மைப்பற்றிய பிணியானது. சம்பாத்தியத்தில்கொஞ்சமே குடியில்செலவிட்டான் என்பதில்லை. சம்பாத்தியம்அத்தனையும் அதிலேயே செலவானது. கையிலே காசில்லைஎன்றால் தனதுதொப்பியை, கோட்டை, பூட்சை அடகுவைத்துக் குடிப்பான். அநேக சமயங்களில் அவன் எழுந்திருக்கும்போதே மதுத்தாகத்தோடு எழுந்திருப்பான். கடையைநோக்கி விரைந்தோடிப்போவான். கடைதிறக்குமட்டும் அங்கேகுந்தித் தவங்கிடப்பான். திறந்ததும் கடையைச் சுத்தம்பண்ணிச் செய்தவேலைக்குக்கூலியாக மதுவார்க்கும்படி மன்றாடிநிற்பான்.

மற் நல்லதொழிலாளி. குடிகாரன்தான். ஆனால், தன் கடமைதவறாத குடியன். அவன் வேலைக்குப்பின்வாங்குவதில்லை. காலதாமதஞ் செய்வதில்லை. பகலெல்லாம் அயராதுஉழைப்பான். இரவெல்லாம் நன்றாகக் குடிப்பான். உடம்புக்கு அசதி என்று ஒருநாளும் அவன ஓய்ந்திருக்கவில்லை.

ஒருநாள் வழக்கத்திற்கு மிஞ்சிக் குடித்துவிட்டான். வெறியினால் நெடுந்தூக்கம். மறுநாட் காலை நேரத்தோடு எழுந்திருக்க இயலவில்லை. கடைசியாக எழுந்துபார்த்தபோது நேரம் போய்விட்டதென்று கண்டான். அவனுக்கு அன்றிருந்த தாகத்திற்கோ அளவில்லை. ஆனால், கையில் காசில்லை. அடகுவைக்கப் பொருளில்லை. மதுக்கடைக்குப்போய் வாசலில் நிலையாய் நின்றான். வேலையிலிருந்து மீளும்நண்பர்கள் தன்னையும் அழைத்துப்போவார்கள் என்ற நம்பிக்கை. ஏன்? அவர்களிடம் பணமில்லாதபோது அவனே அவர்களை அழைத்துச்சென்று தனதுசெலவில் குடிக்கவாங்கிக் கொடுக்கவில்லையா? இப்பொழுதுஅவர்கள் பிரதிஉபகாரம் செய்யமாட்டார்களா?

அவன்எதிர்பார்த்தது நடக்கவில்லை. நண்பர்கள் வந்தார்கள். சிலர் அவனைக்கண்டதும் "ஹலோ" என்றார்கள். அத்தோடு நிறுத்திக்கொண்டார்கள். சிலர் அதுவும் சொல்லாமல் தலையசைத்தார்கள். இன்னுஞ்சிலர் அவனைச் சட்டைசெய்யவேயில்லை. நண்பர்கள் இவர்தாமாஎன்று உளம்வருந்தினான். எவ்வளவு நன்றிகெட்டவர்கள் இவர்கள்என்று எண்ணினான். அவர்களைக் குறைசொல்லி என்னபயன்? தன்னுடைய இழிந்த நிலையை நன்குணர இது சரியானஓர் சந்தர்ப்பமாயிற்று. வீழ்ந்த நிலையைப்பற்றி நினைத்துக்கொண்டிருப்பதில் பயனில்லை. இனி எழுந்திருக்க வேண்டியதுதான். அன்றிரவே தீர்மானித்தான். குடிப்பதில்லை என்று உறுதிபூண்டான். மூன்று மாதத்திற்கு மது அருந்துவதில்லை என்று ஒரு குருவானவர்முன் கரம்உயர்த்தி வாக்களித்தான்.

அன்றே அவன் வாழ்க்கையும் மாறியது. வாக்குறுதியைக் காத்தான். இறுதிவரைகாப்பதற்கு வேண்டுவனவும் செய்துகொண்டான். பாவசங்கீர்த்தனம், தேவநற்கருணை அவனைப் பாதுகாத்தன. அவன் மதுவைவிட்டான். மதியைக்கெடுக்கும்

(தொடர்ச்சி ...ம் பக்கம்)

# தேம்பாவணியும் செபமாலையும்

(பண்டிதர் C. செல்வரத்தினம்)

## களிகூர்ந்தகாரணிக்கம்

### 5-ம் காரணிக்கம்—2-ம் பிரியதத்தம்

### 42. தேவபிதாவின் வக்குத்தத்த ஞாபகசின்னம்

தாவீதின் பட்டணமாகிய ஜெருசலேமை நோக்கி யாத்திரைக் கூட்டம் சென்றுகொண்டிருக்கிறது. யெஸ்ருயேல் சமவெளியையும் தாண்டி, யோர்தான்நதிக் கணவாய்களினூடாக மலை அடிவாரத்தை அடைகின்றது. காடுமுரடான மலைப்பாதைகளின் வழி நடைத் துன்பத்தை எல்லோரும் மகிழ்வோடு சகித்துக் கொள்ளுகிறார்கள். பாலியனான திவ்வியயேசுவும் மிகுந்த உற்சாகத்துடன் மலையேறிச் செல்லுகிறார்.

ஜெருசலேம் நகரம் அதோ தொலைவிலே தெரிகிறது. அந்நகரத்தைக் கண்டதும், யாத்திரிகர்களின் களைப்பெல்லாம் தீர்ந்துபோகிறது. சனசஞ்சாரமற்ற வழியினூடாக அதுவரையும் கூட்டமாகச் சேர்ந்து வந்தவர்கள், நகரத்தைக் கண்டதும் தத்தம் இனபந்துக்கள்சகிதமாகச் சிறுசிறு கூட்டமாகப்பிரிந்து, தத்தமக்கு வசதியான இருப்பிடங்களைத் தேடிக் கொள்ளுகிறார்கள். வறுமையால்வாடிய தச்சராகும் சூசைக்கோ, மனைவியாகிய மரியம்மாளையும், புதல்வராகிய யேசுவையும்தவிரச் சுற்றத்தவர்தான் யாருளர்? எனவே, அவர்கள் மூவரும் தனிமையாகவே தேவாலயத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

தேவாலயத்தின் உச்சிக்கோபுரம் கண்ணுக்குப் புலனாயதும், அவர்கள் உள்ளத்திலே சொல்லொணா மகிழ்ச்சி கரைபுரண்டோடுகிறது. அவர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற அற்புத சம்பவங்களிற் பல அத்திருக்கோயிலின் கண் நிகழ்ந்தனவன்றோ! பட்டமரக் கோல்பசுந்தளிருடன்மலர,மரியம்மாளை மணவாளியாய்ப்பெற்ற தவப்பேற்றை நினைவுறுகிறார் சூசையப்பர். மரியம்மாளோ பன்னிருவருடங்களின்முன் தனது திருக்குமாரனைக் காணிக்கையாக நேர்ந்தபொழுது, சிமியோன் உரைத்த இன்பமும், துன்பமும்கலந்த வாசகத்தை எண்ணுகிறாள்.

அங்ஙனமாக அவர்கள் சிந்தனையில் ஆழ்ந்தபோது திவ்வியயேசு அவர்கள் இருவரையும் பார்த்து, அத்தேவாலயம் அவ்விடத்தில் எடுக்கப்பட்ட காரணத்தை விளக்கலானார்.

இத்தேவாலயம் தேவபிதாவினது வாக்குத்தத்தத்தின் ஞாபகசின்னமாகும். ஏனெனில், இந்த இடத்திலேயே நமது குலமுதல்வனாகிய யாக்கோப் என்பவர் ஒரு காட்சியைக் கண்டார். அவர் இவ்விடத்திலே அக்காட்சியைக் கண்டகாரணமாக இவ்விடத்திலேயே இவ்ஆலயம் எடுக்கப்பட்டது.

"சீர்மீ தாடிய காட்சிச் சிறப்புள்ளிக்
கார்மீ தாடிய கொடிகொள் கவின் சிகரத்
தேர்மீ தாடிய எரிவாய் மணிகுயிற்றிப்
பார்மீ தாடிய படரிவ் வாலயமே"

புகழ்வதற்கரிய அக்காட்சியின் சிறப்பினைக் குறித்தே மேகமண்டலத்தையும்கடந்து கொடிகள் ஆடாநிற்கும் சிகரத்தழகோடு, ஒளிகாலா நிற்கும் மணிகள் பதித்தருளிய இத்தேவாலயம் இப்பூவுலகின்கண் கட்டப்படலானது. அங்ஙனமாக அவர் கண்ட காட்சி எதுவென்னில்.........

"மண்மேல் அடியையவைத்(து) எந்தை வலக்கையால்
விண்மேல் விருப்பொடு தாங்க விண்ணவர்வர்(து)
எண்மேல் இழிந்(து) எழுந்(து) உலவ யாக்கோபன்
கண்மேல் அறிவிலங்(கு) ஏணி கண்டனனால்"

காட்சியிலே ஓர்ஏணியைக்கண்டார். அந்த ஏணியின் அடிப்பாகம் பூமியைத் தொட்டுக் கொண்டிருந்தது. நுனியோ வானுலகைத் தீண்டியது. அதனை எமது பரமபிதாவானவர் வலக்கையால் தாங்கியிருந்தார். அந்தஏணி மூலமாக எண்ணிறந்த வானவர்கள் பூவுலகைநோக்கி இறங்கவும், மானிடர் வானுலகம் ஏறவும் வழியாயிருப்பதைக் கண்டார். இவ்வாறாக யாக்கோப் என்பவர் அக்காட்சியைக் கண்டபோது பரமபிதா அவருக்கு ஒரு வாக்குத்தத்தமும் செய்து தாலானார். எவ்வாறெனில்.....................

"முன்னான் இவை இவண் காண்கால் முற்றுவப்பப்
பின்னாள் உன(து) இனத்(து) உதிக்கும் பிள்ளை அருள்
தன்னால் உனக்(கு)ஒளி தளிர்ப்பக் கண்டதெலாம்
அன்னான் முடிக்குவன் என்றான் அன்(று) இறையோன்"

"நீ கண்ட காட்சியின்படி மனம் களிகூரத்தக்கதாகச் செய்து வைப்போம். உன்குலத்தில் பிறக்கும் ஒரு புதல்வனால் உனக்கு மகிழ்ச்சியும், புகழ்ச்சியும் உண்டாக்குவோம். அக்காலத்தில் நீ கண்ட காட்சியின்படி யாவும் நிறைவேறும். அப்புதல்வன் யாவற்றையும் செவ்வையாக நிறைவேற்றிவைப்பான்" என்று திருவுளம் பற்றியருளினார்.

அவ்வாறாக யாக்கோப்என்பவருக்கு அன்று பரமபிதா வாக்குத்தத்தஞ் செய்தருளிய ... .........

"அன்ன பிள்ளைநான் அன்ன ஏணியும் நான்
இன்ன நகரிடை இறக்கு மாந்தானே
சொன்ன முறையில்ஈர் உலகும் தொடர்ந் தொன்றாய்
மன்ன மகிழ்வுற மாழ்வேன் நான் என்றான்"

"ஆண்டவர் யாக்கோபுக்குச் சொன்ன பிள்ளை நானே. யாக்கோபு கண்ட ஏணிஎன்பது இந்நகரின்கண்ணே யான் இறக்கவிருக்கும் சிலுவைமாமாகும். அவர் கண்ட காட்சியின் பிரகாரம் வானுலகும் பூவுலகுமாகிய ஈருலகும் ஒன்றுபட்டு நிலையான மகிழ்ச்சி அடையும்படி சிலுவையிலே பாடுபட்டு நான் உயிர் மடிவேன்" என்று திருக்குமாரன் அவ்வாக்குத்தத்தம் நிறைவேறியவகையை அவர்களுக்கு எடுத்துக்கூறுகின்றார்.

அவர் எடுத்துரைத்த வசனங்களோ அன்னையும் தந்தையுமாகிய அவர்களுக்கு வேலாயுதம்போலக் காதின்கண் நுழையாநின்றது. அவர்கள் மனம்வெந்து துன்புறுகின்றனர். அது கண்ட திருச்சுதனானவர்.........

"தேன்நேர் மலரெனச் சிறுவன் நகைத்(து) உலகம்
வான்நேர் மகிழ்வது ஆகாதோ வளர்ந் தென்றான்"

"தேனைப்பொழிய மலர்ந்தமலரொப்பத் திவ்வியயேசு புன்னகைசெய்து, இப்பூவுலகத்தைப் பொன்னுலகமாகிய வானுலகம்போலக் களிப்படையச் செய்யலாகாதோ" என்கிறார்.

அவ்வுரை கேட்டுச் சூசைமாதவனும், திருத்தாயாரும் ஒருவாறு மனந்தேறியவராய்த் தேவாலயத்திற் பிரவேசிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க



# சமாச்சாரம்

## ஐவருக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம்

நிகழும் ஆனிமாதம் 13-ந்திகதியாகிய வருகிறஞாயிற்றுக்கிழமை ரோமாபுரி, சம்பேதுருவானவர் மகாலயத்திலே முத்திப்பேறு பெற்ற ஐந்து சுத்தவாளர்கள் அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்படுவார்கள். இந்த ஐவரும் முறையே,

1. அர்ச். ஜோண் பொஸ்கோவின் மாணவரும், 1857-ம் ஆண்டு தமது பதினன்காம்வயதில் மரணமடைந்தவருமான முத். தொமினிக்கோ சவியோ.

2. முத். சூசையப்பு பிஞ்ஞாதெல்லி. இவர் ஓர்யேசுசபைக் குருவானவர். 1811-ம் ஆண்டு மரணமடைந்தார்.

3. முத். காஸ்பாறேதே புவலோ. திருஇரத்தத்தின் சபையை அடியிட்ட ஓர்மேற்றிராணியாரான இவர் 1837-ம் ஆண்டு மரணமடைந்தார். அர்ச். பத்தாம் பத்திநாதராலே முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்பட்டார்.

4. பிறர்சிநேக பணிப்பெண்கள்சபையை அடியிட்ட முத். மரியா குறேசி பிஸ்ஸா தே ரோமா அம்மாள். இவள் தனது 42-ம் வயசிலே 1855-ம் ஆண்டு மரணமடைந்தாள்.

5. முத். பீற்றர் ஷானெல். ஓர்பிரான்சிய குருவான இவர் தமது 38-ம் வயதிலே 1841-ம் ஆண்டு ரொங்காதீவுகளில் ஒன்றான பியுருனதீவில் வேதசாட்சியாக மரணமடைந்தார்.

## வேதனைதரும் சித்திரம்

தற்போது ஜெனிவாநகரிலே கோறியா, இந்தோ-சீனவிஷயமாய்க் கூடிவருகின்ற மகாநாட்டுக்குச் சமூகமளித்திருக்கின்ற கம்யூனிஸ்தசீன, சோவியற்ருஷிய பிரதிநிதிகளுக்குப் பெரிதும் மனவேதனையை உண்டுபண்ணக்கூடிய படம் ஒன்று அம்மகாநாடுகூடிவருகின்ற சபாமண்டபத்தில் காட்சியளிக்கின்றது. இது மனிதசிருட்டிப்பைப் பற்றி வர்ணிப்பதாகும். வத்திக்கானிலே சிஸ்ரைன் சிற்ருலயத்தில் மிக்கேல் ஆஞ்செலோ எனும் பேரானசித்திரகாரரால் விந்தாரிக்கப்பெற்றுள்ள சித்திரத்தின் பிரதி இதுவாகும். இதன்கீழ் "அவர் தமது சொந்தச்சாயலாகவே அவனை உண்டுபண்ணினர்" என்ற வாக்கியம் காணப்படுகின்றது.

### ருஷியாவின்
## காணப்படாத திருச்சபை

ருஷியாவிலே மறைமுகமாய் இருந்துவருகின்ற காணப்படாத திருச்சபை தேவதாயாரிலும், அவருடைய செபமாலையிலும் மிகுந்த பக்திபூண்டிருப்பதாக முன்னர் ருஷிய இராசீயசேவையில் ஈடுபட்டிருந்தவரான யேசுசபையைச்சேர்ந்த வண. நிக்கலஸ் பொக்சுவாமியார் கூறுகின்ருர். முதலாவது உலகயுத்தம் நடைபெற்றகாலத்திலே இவர் வத்திக்கானிடமாக ருஷியஅரசாங்கத்தின் தற்காலிக ஸ்தானீகராயிருந்து மனந்திரும்பி 1924-ம் ஆண்டு திருச்சபையில் சேர்ந்து, தமது 65-ம் வயதிலே குருப்பட்டம்பெற்ருர். கத்தோலிக்கர், பிரிவினைச்சபைக் கிறீஸ்தவர்கள், மற்றும் யூதர்களைத் தானும் அடக்கியதான இந்தக் காணப்படாத திருச்சபை, பிரிந்துபோயிருக்கும் ருஷிய பிரிவினைச்சபை ரோமாபுரியினிடமாகத் திரும்புமாறு வித்திட்டுவருகின்றது; கம்யூனிஸ்தர்களின் நாஸ்திகதிட்டங்களை எதிர்ப்பதிலே அவர்கள் தங்களை நண்பராகக் கருதிவருகிருர்களென்றும் சுவாமியார் கூறுகின்ருர்.

### சர்வதேச
## சற்பிரசாத மகாநாடு

பிறேசில்நாட்டின் தலைப்பட்டணமாகிய றையோ டி ஜனேய்ரோ நகரிலே அடுத்தவருடம் ஆடிமாதம் 17-ந் திகதி முதல் 24-ந் திகதிவரையில் நடந்தேறவிருக்கின்ற சர்வதேச சற்பிரசாத மகாநாட்டுக்குப் பத்துலட்சம்மக்கள் சமூகமாவார்களெனத் தற்போது எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு ஓர்ஞான ஆயத்தமாக அந்நகரிலுள்ள 109 விசாரணைப் பங்குகளிலும் வருகிறஆவணிமுதல் ஐப்பசிவரையிலே 73 மிஷனரிமார் விசேஷஞானவொடுக்கம் போதிக்கவிருக்கின்றனர். அத்துடன் பிறேசில்நாட்டிலுள்ள சகலகோவில்களிலும் வருகிற ஆடிமாதத்தில் விசேஷ திருமணித்தியாலங்கள்பயபக்தியாக நடந்தேறவிருக்கின்றன.

## ஜனுவாரியாரின் திருஉதிரம்

இத்தாலியிலே நேப்பிள்ஸ் நகர் ஆசனக்கோவிலில் பூச்சியமாகவைத்துக் காப்பாற்றப்பட்டு வருகின்ற அர்ச். ஜனுவாரியாரின் திருஉதிரம் நீர்மயமாகும்புதுமை திரும்பவும் இவ்வருடம் நடைபெறலாயிற்று. ஆனல், வழமைபோல வைகாசிமாதத்தின் முதலாவது சனிக்கிழமை அல்ல, ஞாயிற்றுக்கிழமையே நடந்தேறியது. இருவெள்ளிக்குப்பிகளிலும் யாதாமோர் மாற்றமும் ஏற்படாது மணித்தியாலங்கள் கடந்துசெல்வதைக் கவனித்த நேப்பிள்ஸ்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் மிம்மி ஆண்டவர் அங்குசமூகமாயிருந்த [illegible] தொடர்ந்து பக்திவேகத்துடன் செபஞ்செய்யும்படி கேட்டுக்கொண்டார். பின்னர் ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் உறைந்து கட்டியாகியிருந்த அத்திருஇரத்தம் உருகித் தண்ணீர்மயமானது. கடந்த நான்குநூற்ருண்டுகளிலும் மூன்று முறை தவிர மற்றப்படி ஒவ்வோர்வருடமுமே இந்தஅற்புதம் நடைபெற்றுவருகிறது. 1941-ம்,43-ம் ஆண்டுகளில் தாமதமாகவே நடைபெற்றது. பெனெவென்ரோவின் மேற்றிராணியாரான அர்ச். ஜனுவாரியார் கி. பி. 304-ம் ஆண்டு வேதசாட்சியாக மரணமடைந்தார்.

## ஸ்ராலின் பட்டினம்

கம்யூனிஸ்தரின் ஆதிக்கத்திலே இருந்துவருகின்ற கிழக்கு ஜேர்மனியிலுள்ள புதிய சுரங்கப்பட்டினமாகிய ஸ்ராலின் ஸ்ராட்ற் கடைசியாக ஓர் கத்தோலிக்க கோவிலைக் கொண்டிருக்கப்போகிறது. அங்கு ஓர் கோவிலைக்கட்டுவதற்காக அனுமதிகோரி அனுப்பிய மனுக்களை அநேக மாதங்களாகக் கம்யூனிஸ்த அதிகாரிகள் நிராகரித்து வந்தார்கள். தற்போது அதன் உதவிப்பிரதமரான ஒட்ரோ நுஸ்ச்கிஎன்பவர் இந்தக்கோவிலையும், புரொட்டஸ்தாந்தருக்கென மற்ருேர் கோவிலையும் கட்ட அனுமதிசெய்திருக்கின்ருர். முன்னர் ஸ்ராலின்ஸ்ராட்றிலே அவசரகால கோவில் ஒன்றைக் கத்தோலிக்கர் கட்டத் தொடங்கியபோது கம்யூனிஸ்தர்கள் இரவிரவாக அதன் அத்திபாரத்தைச் சிதைத்துவிட்டார்கள்.

## அதிர்ஷ்டசாலியான விமானி

சென்றகார்காலத்திலே ருஷியாவில்கட்டிய ஜெற்விமானம் ஒன்றில் சுதந்திரதென்கோறியாவுக்குத் தப்பியோடிவந்த 22 வயதுடைய ஓர்வடகோறியவிமானியான ரோகு சொக்என்பவர் அங்கே 35,000 பவுண் வெகுமானம்ஒன்று தன்னை எதிர்நோக்கியிருக்கிறதென்பதை அறியவில்லை. ஏனெனில், ருஷியஜெற் விமானம்ஒன்றை அந்தப்படியே கொண்டுவந்து ஒப்படைப்பாருக்கு இந்தவெகுமானத்தை ஐக்கியநாடுகளின் சேனதிகாரம் அளித்திருந்தது. கம்யூனிஸத்தைத் தான் விரோதிக்கக் காரணம் கத்தோலிக்கரான தனது பெற்ருேரேயென்றும், அவர்களிடமிருந்தே சுதந்திரபாசத்

## ஞானப்பூச்செண்டு ?

தைத் தான் கண்டடைந்தாரென்றும் இவர் கூறுகின்ருர். கம்யூனிஸ்தகட்சியில் தான் ஓர் அங்கத்தவராகச் சேர்ந்து விமானத்தைக் கொண்டுசெலுத்துவதற்குத் தன்னைத் தகுதியாக்கிக் கொள்ளப் பயின்றுகொண்டிருந்தபோதிலும் 1949-ம் ஆண்டு முதலே சுதந்திரஉலகத்துக்குப் பறந்து தப்பிப்போவதற்கான ஓர்சந்தர்ப்பத்தைத் தான்எதிர்பார்த்துக்கொண்டிருந்ததாக இவர் வாஷிங்ரன் நகரிலே தெரிவித்திருக்கின்ருர்.

## பத்துவருட காலத்திலே

அமெரிக்க ஐக்கியதேசத்திலே கடந்தபத்துவருடங்களிலும் கத்தோலிக்கரின்தொகை 82 லட்சத்து 28 ஆயிரத்து 723பேரால் அதிகரித்திருக்கிறது; தற்போது அத்தேசத்திலே மொத்தமாக 3 கோடியே 16லட்சத்து 48 ஆயிரத்து 424 கத்தோலிக்கர் இருந்து வருகிருர்களென 1954-ம் ஆண்டுக்குரிய "கதலிக் டிறெக்ரறி" தெரிவிக்கின்றது. சென்ற 1953-ம் ஆண்டிலே அங்கு கத்தோலிக்கர் தொகை 12,23,409 பேரால் அதிகரித்துள்ளது. இவர்களில் 1,16,696பேர் மனந்திரும்பியவர்கள். கடந்த பத்து வருடங்களிலும் அங்குமனந்திரும்பியவர்கள் 10 லட்சத்து 97 ஆயிரத்து 771 பேர். குருமார்தொகையும் சென்றவருடத்திலே 229 பேரால் அதிகரிக்க, தற்போது அங்கே முன்னில்லாத பெருந்தொகையினராய் 45,451 குருமார் தொண்டாற்றி வருகிருர்கள்.

### அர்ச். பத்தாம்பத்திநாதர் கோவில்

இங்கிலாந்திலே ஒக்ஸ்போட்-அபிங்டன் நகர்களுக் கிடையிலுள்ள வூட்ரன்எனும்கிராமத்திலே போட்ஸ்மத்நகர கிங் மேற்றிராணியார் ஓர் புதிய கோவிலைக் கட்டியெழுப்பி அர்ச். பத்தாம்பத்திநாதர் பேரால், அவர் அர்ச்சியசிஷ்டபட்டஞ்சூடிய சென்ற 29-ந்திகதி சனிக்கிழமை அர்ப்பணஞ்செய்திருக்கின்ருர். இத்திருச்சடங்கு அன்று மாலைத் திவ்வியபூசையின்போது நடந்தேறியது. அப்பூசையின்போது அநேக பிள்ளைகள் முதல்நன்மைபெற்றுத் "திவ்வியநற்கருணை"யின் அர்ச்சியசிஷ்டரை மகிமைப்படுத்தினர்கள். கிங்மேற்றிராணியார் இந்தஅர்ச்சியசிஷ்டபாப்பானவருடன் நேர்முகமாகத் தொடர்புபூண்டவர். அவர் பாப்பரசராக முடிசூடியபோது, ஓர்மாணவனுயிருந்தஇவர் அத்திருவைபவத்திற்குச் சமூகமளித்திருந்தார்.

—பலொத்தினிய குருமார்சபையை அடியிட்டவரான முத். வின்செஞ்சோ பலொத்திசுவாமியார் அடுத்தகாலத்திலே அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்படுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியவேத
**பாதுகாவலன்**
1954-ம் ஆண்டு
ஆனிமாதம் 10-ந் திகதி

## தேர்தலும் வாக்காளரும்

'முனிசிப்பல்' நகரசபைத் தேர்தல்களும், மற்றும் அநேக பட்டினசங்கத் தேர்தல்களும் வழமைபோல அண்மையிலே நடந்தேறவிருக்கின்றன. இந்தத்தேர்தல்கள் சனநாயக அடிப்படையிலே — சமாதான முறையிலே நடைபெறவேண்டுமென்பதும், நகரபரிபாலன சேவையிலும், சனசமூகசேவையிலும் ஈடுபட்டுழைக்கத் தகுதிவாய்ந்தவர்கள்தான் வட்டாரப்பிரதிநிதிகளாகத் தெரியப்படவேண்டுமென்பதுமே நமதுபேராவலாகும். இந்தத் தேர்தல்கள் எவ்வாறுநடந்தாலும் எமக்கென்ன; இராமன் ஆண்டாலென்ன; இராவணன் ஆண்டாலென்ன; கூடவந்த குரங்கினந்தான் ஆண்டாலென்னவென்று கம்யூனிஸ்த, லங்காசமசமாச, நவலங்காசம சமாச சமதர்மக்கட்சிகள் வாய்பொத்திக்கொண்டு வாளாவிருக்கப்போவதில்லை. இக்கட்சிகள் மூன்றும் அடம்பன்கொடிகள் போலத்திரண்டு, தங்களுள் ஐக்கியப்பட்டுத் தங்களிடையே ஓர் ஐக்கியமுன்னணியை அமைத்துக்கொண்டு, இத்தேர்தல்களிலே ஒருகை பார்க்கவேண்டுமென்று நெடுநாளாய் எடுத்த எடுப்பெல்லாம் பச்சைமண்ணும், சுட்டமண்ணும்போலப்படு தோல்வி யடைந்துவிட்டது.

தாங்கள் எதிர்பார்த்தஐக்கியம் ஏற்படாததையிட்டு அவைகள் ஒன்றின்மேல்ஒன்று பழிசுமத்துகின்றனவேயன்றிப் பரிகாரமெதுவும் தேடுவனவாயில்லை. இதிலிருந்து இலங்கை மக்கள் படிக்கவேண்டியபாடம் அதிகமுண்டு. சில்லறைக் கட்சிகளாகிய இந்த இடதுசாரிக்கட்சிகள் ஐக்கியஎதிர்ப்பு முன்னணிஒன்றை ஆக்கிக்கொள்ள இயலாதிருக்கும்போது, என்றோ ஒருநாள் தாங்கள் ஆக்கிவிடுவதாக நம்பிக்கொண்டிருக்கும் அரசாங்கத்தை எவ்விதம் ஐக்கியமாக ஆக்கப்போகின்றன? ஆக்கி எவ்விதம்ஐக்கியமாக அதை நடத்தப்போகின்றன? முற்றிலும் ஒன்றுக்கொன்று முரண்பாடுடைய நோக்கமும், கொள்கைகளும், போக்குமுள்ள இந்தஇடதுசாரிகள் ஒன்றையொன்று ஆதரிக்க மறுப்பதும், ஒன்றையொன்று காட்டிக்கொடுப்பதும் நடக்கக்கூடியன அன்றோ! அதனால் அவற்றிலே தேர்தலுக்குமுற்படும் ஒருகட்சி அபேட்சகரை மறுகட்சியினர் ஆதரியாது எதிர்க்கட்சி அபேட்சகரை ஆதரித்துவாக்களிப்பது அதிசயமன்று. ஆகவே, இக்கட்சிகளினிடையே இணக்கம்ஏற்படுவது முயற்கொம்பு, குதிரைக்கொம்பாகவேமுடியும். இன்னும் கம்யூனிஸ்தகட்சியின் வேலைமுறை நாடெங்கும் நன்கறியப்பட்டதாகும்.

ஆகவே, இந்தக்கட்சிகள் நாயும், பூனையும், நரியும்சேர்ந்தாற்போல அதிர்ஷ்டவசமாக ஒன்றுசேர்ந்து அதிகாரத்துக்கு வருங்காலத்து, அவைகள் ஒன்றையொன்று முட்டிப்பொருதிக் காடையும் புழுதியும் போன்று நாடகம் நடத்தத் தொடங்கவே நாட்டில்எத்துணை பெரும் கலவரமும், ஒழுங்கீனமும், கலகமும் ஏற்படுமென்று சிந்தித்துப்பார்ப்பது அத்துணை சிரமமான ஓர்கருமம்அன்று. ஆதலால் இந்தத்தேர்தல்களின்போது, வாக்காளர்கள் இவைகளையெல்லாம் இனிதேசிந்திக்க வேண்டும். குளத்தைக்கலக்கிப் பருந்துக்கிரைகொடுக்க முனைந்திருப்பவர்களைப் புறத்தேஒதுக்கிவிட்டு, நகர்கள் பட்டினங்களின் நல்வாழ்வுக்கும், முன்னேற்றத்திற்குமாக அயராது உழைக்கப்போதிய ஆற்றல் வாய்ந்த அபேட்சகர்களைத் தெரிவுசெய்து பிரதிநிதிகளாக அனுப்பிவைக்கவேண்டும். மக்களின் பொருளாதாரத்தையும், சுபீட்சத்தையும் தங்கள் குறிக்கோளாகக்கொண்டு உழைக்கும் பிரதிநிதிகளைக் கொண்டுள்ள வட்டாரங்கள் பாக்கியம்பெற்றனவாகும். மக்களின்பொருளாதாரநிலை ஆதியனஉயர்ந்து அவர்கள்மத்தியில் சுபீட்சம்ஏற்படுமானால் நாஸ்திகபொதுவுடைமை என்பது இருந்தவிடமும் தெரியாது ஒழிந்து மறைந்துபோகும். இது அனுபவத்திற் கண்ட உண்மையென்க.



## சதாசகாயமாதா கோணம்

### தேவதாயாருக்கு ஒருகடிதம்

(முன் தொடர்ச்சி)

பையனின்கேள்விக்குப் பதில்சொல்லாமலே தடதடத்தகுரலில்:

"நீ அம்மாவைக் கொஞ்சியபோது ஒன்றும் அவதானிக்கவில்லையா?" என்றார்.

"அவளின்தேகம் குளிர்ந்து விறைத்துப்போயிருந்தது; முகம் பால்போல வெளுத்திருந்தது; அவளின் கைகள் இரண்டும் கோர்த்தாற்போல, ஆடாமல்அசையாமல் அவளுடையநெஞ்சின் மேல் இருந்தன. அவளின் தலை தலையணைக்குமேலாகத் தொங்கிக்கொண்டு இருந்தது. கண்கள் அரைகுறையாக மூடப்பட்டிருந்தபோதிலும் அவைகள் மோட்சத்தை அண்ணாந்து பார்ப்பது போலத் தோன்றின" என்று சொன்னான் ஜீன்.

"தேவைக்களவாக உண்டுஉடுத்துக்கொள்ளத் தக்கநிலைமையில் நான் இருந்தும் பணக்காரரில் நான் எவ்வளவுஎரிச்சலும், புகைச்சலும் கொள்ளுகிறேன்; பசிப்பிணியால் இதோ! ஒரு சீவன் மாண்டுவிட்டதே! ஆ, தெய்வமே!" என்று தனக்குள் எண்ணிக்கொண்டு,

"தம்பி! நீ விரும்பிய கடிதம் எழுதியாயிற்று; அனுப்பியாயிற்று; குறித்த இடத்தில் போய்ச்சேர்ந்தும்விட்டது; அத்தோடுஅங்கிருந்து மறுமொழியும் கிடைத்துவிட்டது; உன்அம்மா இருக்கும்இடத்துக்கு என்னைக் கூட்டிக்கொண்டுபோ" என்றார்.

"சரி, நான்உங்களைக் கூட்டிக்கொண்டுபோவதற்கு ஆயத்தமாயிருக்கிறேன்; ஆனால், நீங்கள் ஏன் அழுகிறீர்கள்?" என்று மிக்கஆச்சரியத்துடன் ஜீன்கேட்டான்.

இளைஞனைக் கட்டிப்பிடித்து, மார்போடணைத்து, கண்ணீர் தாரைதாரையாய்வடியப் பொனின் சொல்லுவார்: "மனிதர் அழக் காரணமில்லைத்தான்; அவர்கள்தான் ஏன் அழவேண்டும்? என் அருமைச் சின்னமகனே! நீகலங்கவும், அழவும் காரணம்உண்டென்று அறிந்துகொண்டேன்; எனக்கும், இப்போ கனகாலத்துக்குமுன்பு ஒரு தாய் இருந்தாள்; நீசொன்னகுறிப்பிலும், விளக்கமான விபரிப்பிலுமிருந்து நான் அவளை இப்போகாண்கிறேன்; என்னைவிட்டுப் பிரியமுன், மரணப்படுக்கையில் இருந்துகொண்டு என்னைக் கிட்டஅழைத்து: 'தம்பி, பொனின்! நீ ஓர்நேர்மையுள்ளவனாகவும், உத்தமகத்தோலிக்கனாகவும் இரு' என்றாள்; இவைதான் அவளுடைய கடைசிவார்த்தைகள்; அவளுடையகட்டிலின் தலைமாட்டுப்பக்கத்துச் சுவரில் ஒருதேவமாதாவின்படம் தொங்கிக்கொண்டிருந்தது; அதுஎன்னைப்பார்த்துப் புன்சிரிப்புக்கொள்வதுபோலத் தோன்றியது; அந்நேரந்தொட்டு அப்படம் என்மனதைவிட்டு அகலவில்லை; நான் ஒருநேர்மையான மனிதனாக வாழ்ந்துவந்திருக்கிறேன், மெய்தான்; ஆனால், நல்லகிறீஸ்துவனாக இருக்கிறேனோ? இல்லையென்றே சொல்லலாம்."

பையனைக் கரங்களில் ஏந்தியபடியே தாத்தாபொனின் எழுந்துநின்றார், கண்களை மேல்நோக்கினார். திருமபவும் தொடர்ந்து சொல்லுவார்: "என் தாயே! இதோபார்! இதோபார்! மனத்திருப்திகொள்ளு! மனிதர் என்னைப் பரிகாசம்பண்ண விரும்பினால் பரிகாசம் பண்ணட்டும், நிந்திக்கட்டும், நீ இருக்கும் இடத்துக்கு நானும்வரத் தீர்மானித்துக்கொண்டேன். என்னோடு இந்தச்சின்னச்சம்மனசையுங்கொண்டு வருவேன், இவன் என்னைவிட்டு இனிமேல் விலகமுடியாது. இவன துகுறும்புக்கடிதம் எழுதப்படாமுன்னரேயே இரட்டிப்பான நன்மையைப் பயந்திருக்கிறது. மரித்த அவனின்நேசமிக்க தாயாரினிடமாக அவனுக்கு ஒருதகப்பனையும், எனக்குத் தீரமுள்ளஒரு இருதயத்தையும் கொடுத்திருக்கிறது."

தேவதாயார், சதாசகாயமாதா என்றழைக்கப்படப் பாத்தியதையுடையவ என்பதற்கு இதுவுமொரு சான்றல்லவோ?

## குரு வணக்கம்

பூர்வகாலத்திலே குருமார்மட்டில கிறீஸ்துவர்கள் காண்பித்து வந்த மதிப்பும், சங்கையும் இவ்வளவென்று நாவினலுரைக்கும் தன்மையனவல்ல. மூற்காலத்தில் செலரீனுஸ், அவுறேலியஸ் என்ற இருபிரபுக்கள் இருந்தார்கள். அவர்கள் சத்தியவேதத்தில் வெகு நிலைமையாயிருந்து மனத்தைரியமாய் விசுவாசத்தின் முகாந்திரமாக அநேகாநேக உபத்திரவங்களுக்குள்ளானார்கள். அர்ச். சிப்பிரியான் என்பவர் அவர்களது உறுதியான விசுவாசத்தை அறிந்து, அவர்கள்பட்ட அவஸ்தைக்குச் சம்பாவனையாக, அவர்களைக் குருமார் அந்தஸ்துக்குத் தெரிந்துகொள்ள உத்தேசித்துத் தமதுவிருப்பை அவர்களுக்கு வெளியிட்டார். ஆனல், அவர்கள் குருத்துவஅந்தஸ்தில் மதிப்புக்கொண்டிருந்தமையால் அத்தகைய உயர்ந்தஅந்தஸ்துக்குத் தாங்கள் பாத்திரவான்கள்

## ஞானப்பூச்செண்டு?

அல்லவென்று நினைந்து தாழ்ச்சியின்நிமித்தம் அதற்குச் சம்மதிக்கவில்லை.

செலரீனுஸ் பிரபுவுக்கு அனந்ததயையுள்ள சர்வேசுரன் காட்சியாகிக் குருத்துவ அந்தஸ்துக் குட்படுவது தமது சித்தமென்று அறிவிக்கவே அவரும் அவ்வந்தஸ்திலுட்பட்டு அர்ச்சியசிஷ்டரானார்.

பேஸில்என்ற சக்கிரவர்த்தி தமது செல்வபுத்திரன் சிங்கராயரைநோக்கி, குருமார் சர்வேசுரனுடைய ஸ்தானபதிகளாய் இருப்பதாலே, அவர்களுக்குச் செய்யும் சங்கை, மரியாதை சர்வேசுரனிடம் உடனேயே போய்ச் சேருகிறபடியால், மேலான சங்கை, மரியாதை குருமாருக்குச்செய்யுமாறு கற்பித்தார். 585-ம்ஆண்டு நடந்தேறிய இரண்டாம்மாக்கன் என்ற சங்கம் குதிரையில்ஏறிய ஓர் குருவானவரும், ஓர் சாதாரண மனுஷனும் ஒருவர் ஒருவரைச் சந்திக்கும்போது குருப்பட்டமில்லாதசாதாரணமனுஷன் தொப்பியையெடுத்து மூந்த மூந்தக் குருவானவருக்கு மரியாதை செலுத்த வேண்டுமென்றும், குருவானவர் கால்நடையாகப் போக, ஒருமனுஷன் குதிரைச் சவாரியில் அவரைச்சந்தித்தால் குதிரையைவிட்டுஇறங்கிக் குருவானவருக்குச் சங்கைசெய்ய வேண்டுமென்றும் கற்பித்திருக்கிறது.

அர்ச். அமிர்தநாதர் காலத்தில் நடந்த வேறொரு விசேஷம் உண்டு. அவர் மேற்றிராணியாராயிருந்து அதிகாரம் செலுத்திய காலத்திலே பதிதர்அநேகர் இருந்தார்கள். பிரபுத்துவமுடைத்தான துரைசானிஒருத்தி பதிதமதத்தி லிருந்தபடியால், ஓர் பதிதமேற்றிராணியார் அர்ச். அமிர்தநாதருக்குப் பதிலாய் வரவேண்டுமென்று முயற்சி பண்ணி, அர்ச். அமிர்தநாதர் தமதுமேற்றிராசனக் கோவிலை விட்டுப் போகும்படி கையினலே அவரைத் தள்ளத்துணிந்தாள். அப்போது அர்ச். அமிர்தநாதர் அவளைப்பார்த்து: "நான் குருத்துவத்துக்குப் பாத்திரவான் அல்ல என்பது மெய்; ஆனல், குருவானவர் எவராயிருந்தாலும், எப்பேர்ப்பட்டவராயிருந்தாலும் அவரைத்தொடுவதற்கு உனக்கு யாதொருசுதந்தரமுமில்லை; உனதுசெயல் சர்வேசுரனின் நீதிக்கோபாக்கினைக்கு உன்னை உள்ளாக்குமென்றார். அவர் அவ்வாறு சொன்ன மறுநாளே அவள் இறந்துபோனாள். அதனல் குருமாருக்குச்செய்யும் அவசங்கை சர்வேசுரனுக்கு எவ்வளவு பொருந்தாதென்பது வெளியரங்கமாகத் தெரியவருகிறது.

திருச்சபையின் தீபமாகவும், அநேகாநேகர் சந்நியாசஞ் செய்து மோட்சபாக்கியத்தை அடையும்படிக்கான மடத்தை உண்டாக்கினவருமான அர்ச். ஐந்துகாயப் பிரான்சீஸ்கு ஒரு குருவானவரையும், ஓர்சம்மன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பரசர் ரெலிவிஷனில் பேட்டியளிக்கின்றார்

## ஐந்து பாஷைகளில் சொற்பொழி வாற்றுகின்றார்

[லண்டன்நகரிலிருந்து சென்றஞாயிறன்று கிடைத்த தந்திச்சமாச்சாரத்தின் பொழிப்பு.]



சர்வதேசரெலிவிஷன் (தூரக்காட்சி) இணைப்பின் முதலாவது நாளிலே எட்டுநாடுகள் கலந்துகொள்ளலாயின. சரித்திரத்திலேயே முதன்முறையாக இன்றிரவு பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசர் பல்லாயிரக்கணக்கான மைல்தூரம் பரந்துசென்ற ரெலிவிஷன் தூரக்காட்சி அஞ்சல்கள்மூலம் எட்டு நாடுகளுக்குத் தமதுபேட்டியருளலாயினர். 78 வயதான பாப்பரசர் இரண்டு "ரெலி-காமரு"க்கள்முன்பாக நின்றுகொண்டு 15 நிமிஷம்வரையில் ரெலிவிஷன் தூரக்காட்சிபார்க்கும் சுமார் 9 கோடிமக்களுக்குப் பேசினர். அதன்முடிவிலே தமது அப்போஸ்தலிக்கஆசீர்வாதம் அருளினர்.

பாப்பரசர் இத்தாலிய, பிரான்சிய, ஜேர்மனிய, ஆங்கில, டச்சுப்பாஷைகளில் முறையே பேசினர். சற்பிரசாத ஆசீர்வாதத்தின்போது பாடுங்கீதங்களை லத்தீனில் பாடினின்ரூர்.

வத்திக்கானிலிருந்து அவரது ரெலிவிஷன் தூரக்காட்சிப்படம் வடஇத்தாலியின் மலைத்தொடர்களுக்குமேலாய்ச் சுவிற்சர்லாந்துக்கும், பிரான்சுக்கும், அங்கிருந்து பெல்ஜிய, ஒல்லாந்த நாடுகளின் சமபூமிகளுக்கும், அங்கிருந்து மேற்குஜேர்மனிக்கும், தென்மார்க்குக்கும், ஆங்கில்கால்வாயினூடாகப் பிரித்தானிக்கும் அஞ்சல்செய்யப்பட்டது.

தாம் பேசிய ஐந்துபாஷைகளில் ஒவ்வொன்றிலும் பாப்பரசர்அனுப்பிய சுருக்கமான செய்தியிலே, ஐரோப்பியசம்பவங்களின் பிரதிமைகள்—அதாவது பிரதிரூபங்களை ஐரோப்பியர்களின் இல்லங்களுக்குக் கொண்டுவரக் கூடியதாகச் செய்த தொழிலநுட்பதிறமையைப் புகழ்ந்துகொண்டார். மேலும் ரெலிவிஷன் தூரக்காட்சியானது தங்கள் உண்மையான ஆழ்ந்தஉணர்ச்சிகளையும், நல்லெண்ணத்திலும், ஒத்துமைப்பிலும் தங்களுக்குள்ள விருப்பத்தையும் ஐரோப்பிய மக்கள் மற்றவர்களுக்குக் காண்பிக்கச்செய்வதாகும்; அநேக முட்டுக்கட்டைகளை அது ஒழித்து, எல்லாத்துக்கும் மேலாக மனிதரின் நலனுக்கும், சேமத்துக்குமாக ஏதோபுனிதமானமுயற்சி செய்யத்தான் வேண்டுமென்ற ஓர்புதிய வாஞ்சையை எழுப்புவதாகுமென்றும் அவர்கூறலாயினர்.

1,000 முதல் 1,700 மைல் தூரத்துக்கப்பாலுள்ள தங்கள் இல்லங்களில் இருந்துகொண்டு பிரித்தானியமக்கள் பார்த்த பாப்பரசரின் உயிர்ப்படங்கள் உள்நாட்டு ரெலிவிஷன் படங்களைப்போல மிகத்தெளிவாயும், துலாம்பரமாயும் இருக்கக் காணப்பட்டன. (அதனால் முன்சொன்ன ஒன்பதுகோடி மக்களும் ரெலிவிஷனிலே அவரை வத்திக்கானில் நேர்முகமாகக் காண்பதுபோலக்கண்டும், அவர் நேர்முகமாகப் பேசுவதுபோலக் கேட்டும் மகிழ்ச்சியடைந்தார்களென்று சொல்லவேண்டியதில்லை.)

---

சானவரையும் கண்டால், குருவானவர் யேசுநாதரின் பிரதிநிதியென்ற மேலான அதிகாரம் பெற்றிருப்பதால், அவருக்கே முந்தச் சங்கைசெய்வேன் என்பார். மேலும் குருத்துவ அந்தஸ்தின்மீதுள்ள மேலானமதிப்பினிமித்தம் அவர் ஆறுபட்டம் பெற்றிருந்தாலும், ஏழாம்பட்டமாகிய குருப்பட்டம்பெறத் தாழ்ச்சியினிமித்தம் சாகிறவரையில் சம்மதிக்கவில்லை.

ஆகையால், குருமாருக்கு நாம் சங்கைபண்ணினுல், அவர்கள் நம்மை மதிக்கமாட்டார்களென்று அஞ்சவேண்டியதில்லை. எவ்வளவாக நாம் அவர்களுக்குச் சங்கைசெய்வோமோ, அவ்வளவாக அவர்கள் தங்கள் அபாத்திரமான அந்தஸ்தையும், சர்வேசுரன் அவர்களை அழைத்ததினுலே அந்தஅந்தஸ்தின் மகத்துவத்தையும் நினைத்து அதிகமதிகமாய்த் தாழ்ச்சியும், சர்வேசுரனுக்கு நன்றியறிதலுமுள்ளவர்களாவார்கள். அதனுல்நாம் எப்பொழுதும் குருமாருக்குச் சங்கை, மரியாதை செய்துவரவேண்டும்.

குருவணக்கம் பெருவணக்கம். குருமாருக்குஉரிய அந்தவணக்கத்தைச் செலுத்தாதவர்கள் பெரும் அபராதியாகிறுர்கள்.

---

## GOVT. TENDERS

### Mannar Kachcheri

N1390—Tenders are invited for the purchase of the exclusive privilege of selling toddy by retail in the toddy taverns in the Mannar Dist., during the period 1-7-54 to 30-6-55. Tenders close with A. G. A., Mannar, at 9 a. m. on 17-6-54. For particulars see Part I—Section II, Govt. Gazette, 4-6-54.

---

# சோவியற் ருஷியாவின் லட்சாதிபதிகள்

சமீபத்திலே ருஷிய அரசாங்கம் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வமான புள்ளிவிபரங்களின்படி இப்பொழுது சோவியற்ருஷியாவிலே 930 லட்சாதிபதிகள் உள்ளனர். இவர்களில் 780 பேர் வெறும் லட்சாதிபதிகள் அல்லர். கோடீசுவரர்கள்.

ருஷியாவில் எந்த லட்சாதிபதியும் இருப்பது சாத்தியமில்லையென்று கருதலாம். ஏனெனில், செல்வத்தைப்பற்றியும், தொழிலாளர்வகுப்பைப்பற்றியும் கம்யூனிஸ்தர்கள் சண்டமாருதப்பிரசாரம செய்துள்ளார்கள். "கம்யூனிஸமென்பது ஏற்றத் தாழ்வுகளைச் சமப்படுத்தும் ஒருமகத்தான சாதனம்; சோவியற்ருஷியாவில் லட்சாதிபதிகள் இருக்கிறுர்களென்ற எந்தப்பேச்சும் வெற்றுரையேயாகும்; அது மாக்ஸீயத்துக்கு விரோதமான கற்பனை" என்று இரும்புத்திரை நாடுகளுக்கு வெளியேயுள்ள கம்யூனிஸ்தஅனுதாபிகள் உங்களுக்குச் சொல்லார்களென்பதில் சந்தேகமில்லை.

ஆனுல், லட்சாதிபதிகள், கோடீசுவரர்கள்என்னும் உயர்ந்தபிறவிகள் மகிமைபொருந்திய தங்கள் தந்தைநாடான சோவியற்ருஷியாவில் உணடென்று ருஷியர்களே அறிவித்தால்...? ருஷியா வர்க்கபேதமற்ற— தோழமையுணர்ச்சியுள்ள — சமத்துவமானமக்களின் சனநாயகவாதிகளைக்கொண்ட ஒருசமுதாயத்தைக் கட்டித் தழுவிக்கொண்டிருந்தபோதிலும் ருஷியாவில் அநேக லட்சாதிபதிகளும், கோடீசுவரர்களும் இருப்பதாகவே தோன்றுகிறது.

இந்தச் செல்வந்தர்களுக்கிடையே ஒரு பெண்ணும்கூட இருக்கிறுள் சோவியற்ருஷியாவிலுள்ள ஒருபெண்ணுக்குப் பத்துலட்சம்ரூபா பெறுமதியான சொத்துஉண்டு. சமீபத்தில் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வமான சோவியற் புள்ளிவிபரங்களிலிருந்து சோவியற் ருஷியாவில் இப்பொழுது 930 பேருக்குக் குறையாத லட்சாதிபதிகள் இருப்பதாகத்தெரிகிறது. இவர்களில் 780 பேர் வெறும் லட்சாதிபதிகளல்ல. இவர்கள் கோடீசுவரர்கள். கம்யூனிஸ்தர்களாயிருந்தும் இவ்வளவு பெரியபணக்காரர்களாக இருக்கும் இவர்கள்யாவர்? இவர்கள் அநேக தொழில்துறைகளைச் சேர்ந்தவர்கள். ஆனுல், இந்த "மக்களின் லட்சாதிபதிகளிலே" பெரும்பாலோர் நடிகர்களாகவும், எழுத்தாளர்களாகவும், விஞ்ஞானிகளாகவும், ருஷிய இராணுவத்தளபதிகளாகவும் இருக்கின்றனர்.

உதாரணமாக, பிரசித்திபெற்றபோர்வீரரான மாஷல் செமயொன் புடென்னியை எடுத்துக்கொள்ளுவோம். ஒரு காலத்தில் கமக்காரனுகவிருந்த மாஷல் புடென்னி—எட்டு அங்குல நீளமுள்ள மீசையைக்கொண்ட மாஷல்புடென்னி—1941-ம் ஆண்டு ஹிற்லரின் படைகளை எதிர்த்து நின்று உக்றேயினைப்பாதுகாத்த மாஷல் புடென்னி — இப்பொழுது நாளொன்றுக்கு 100 பவுணுக்குமேற்பட்ட தொகைக்குச் சமமான சம்பளம்பெறுகிறுர். அநேக குதிரைகளை வைத்திருக்கும் அவருக்கு அவைகள் நிறைய வருமானத்தைச் சம்பாதித்துக்கொடுக்கின்றன. இது தோழர்மாஷலுக்கு ஒருவிநோதமான பிரபுத்துவ பொக்கிஷமாயிருக்கின்றது மஸ்கோ சமூகவட்டாரங்களில் இவர் "சிரித்துவிளையாடும் மாஷல்" என அழைக்கப்படுகின்றுர். மாஷல்புடென்னிக்கு அநேககுதிரை லாயங்களை நடத்துவதற்கு அவகாசம்கிடைக்கிறது. குதிரைப் பந்தயங்களில் பணம்கட்டி இவர்வருடந்தோறும் பலலட்சம்ரூபிள் சம்பாதிப்பவரெனப் பிரசித்திபெற்றுள்ளனர்.

ருஷிய வர்த்தகமந்திரியான தோழர் மிக்கோயன்என்பவர் "மக்களின் லட்சாதிபதிகளில் மற்றெருருவர். மஸ்கோவிலுள்ள பிரமாண்டமான நறிச்சின்அரண்மனை இப்பொழுது தோழர் மிக்கோயனுக்குச் "சொந்தம்." இவர் வாரத்தில் அநேகமுறை ஆடம்பரமான விருந்துபசாரங்களை நடத்துகிறுரெனச் சொல்லப்படுகிறது.

இந்த விருந்துபசாரங்கள் "அராபியஇரவுகள்" என்னும் கதைகளில் வர்ணிக்கப்பட்டுள்ள விருந்துகளைப்போல் அவ்வளவு ஆடம்பரமாக நடைபெறுகின்றனவாம்.

புதிதாகமஸ்கோவில் தனவந்தராகியுள்ள மற்றெருருவர், பிரசித்திபெற்ற உல்ஜனோவா என்பவர் இவர் ருஷியாவின்தலைநகரில் நடனமாடும் மிகச்சிறந்த நடனகலாவல்லி. இந்த உல்ஜனோவா ஒருகாலத்தில் காலிட்ஸின் இளவரசர்களுக்குச சொந்தமாயிருந்த ஆடம்பரவசதிகளுள்ள "வேட்டையாடும்மாளிகை"யில் ஸார் அரசபரம்பரையைப்போல் இடாம்பீகவாழ்க்கை நடத்துகிறுர். இம்மாளிகை இவருக்குக் காலஞ்சென்ற சோவியற் பிரதமர் மாஷல் யோசெவ் ஸ்ராலினுல் அன்பளிப்புச் செய்யப்பட்டதாகும்.

ருஷியாவிலுள்ள "சமாதான இயக்கத்தின் பிரதமபிரதிநிதியான இல்யா ஈரன்பேர்க்கு என்பவரும் இப்பொழுது தொழிலாளர் சுவர்க்கத்திலுள்ள லட்சாதிபதிகளில் ஒருவராக இருக்கின்றுர். ஆனுல், சமூகத்தில் தமக்குச்சமமான அந்தஸ்திலுள்ளவர்களைப்போல் நடந்து எளியவாழ்க்கை நடத்துவதுடன் அமைதியாகவும், படாடோபமற்ற முறையிலும் நடந்துகொள்ளுகிறுர். இல்யா ஒருபொழுதுபோக்காக நல்ல சாதிநாய்களை வளர்க்கிறுர். முன்சொன்ன மாஷல் புடென்னி தினம் நூறு பவுண் சம்பளம் பெறுகிறுர். ஆனுல், செஞ்சேனையில்சேரும் புதிய வீரனுக்கு வாரம் இரண்டு சிலின் நான்கு பென்ஸ்தான் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது.

---

# அர்ச். அந்தோனியார் கோவில் — மானிப்பாய்

மானிப்பாயிலே வழமையாகக் கொண்டாடப்படும் அர்ச். அந்தோனியாரின்திருநாளுக்கு ஆயத்தமான நோவனைகள் இந்தஆனிமாதம் 11-ந் திகதி வெள்ளிக்கிழமைமுதல் தினமும் மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும்.

19-ந் திகதி சனிக்கிழமை கடைசி நோவனையின்போது மாலை 7 மணிக்கு மகாவந். ஜே. ஏ கியோமார்ஆண்டவர் வேஸ்பர்பாடுவார்.

திருநாளாகிய 20-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்குத் தனிப்பூசை, 7-30 மணிக்குப் பாடற்பூசை. அதன்மேல் அர்ச். அந்தோனியாரின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நடந்தேறும். யாத்திரையாக வருகிறவர்கள் தங்குவதற்கான வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. பக்தர்கள் வழமைபோலத் திரளாகவந்து சமூகமளிப்பார்களாக!

காணிக்கைப்பணம் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பவும்.

ஜி. ரி. பாலசுந்தரப் சுவாமியார்,
O. M. I.
அர்ச். அந்தோனியார் கோவில்,
மானிப்பாய்.

---

—செய்திகொண்டுசெல்லும் ஐப்பானியபுறுஒன்று 11 மணித்தியாலத்தில் 900 மைல்பறந்து உலகில் முதன்மை பெற்றிருக்கிறது. ஐப்பானிய புறுப்பந்தைய சங்கத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட பறக்கும்பந்தயத்தில்தான் இந்தப்புறு பங்குபற்றியது. ரோக்கியோ நகரிலுள்ள பத்திரிகைகள் எல்லாம் செய்திகொண்டுசெல்லும் புறுக்களை வைத்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

ஆனிமாதம் 13-ந் திகதி ரோமாபுரியிலே மிகஆடம்பரமாக ஐந்து சுத்தவாளருக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் அருளப் படப் போகிறது. அவர்களிலே பிள்ளைகளின் கவனத்தைக் கவரக் கூடியவரும், 14 வயதில் பரிசுத்ததனம் அடைந்தவரும் தோமினிக் சவியோ ஆவர். இவர் ஒரு மேற்றிராணியார் அல்ல. குருவானவர் அல்ல. குருமாணவனும் அல்ல. சந்நியாசியும் அல்ல. மரிக்கும்போது இவருக்குப் 14 வயதென்றால் இவர் எந்த வகுப்பைச் சேர்ந் திருப்பார்? இவர் ஓர் பாடசாலையில் படித்துவந்த பாலியர். உங்களைப் போலப் படிப்பிலும், விளையாட்டிலும் தனது நேரத்தைச் செலவிட்டவர். என்றாலும், நான் இப்போது சொல்லப் போகும் சிலகுறிப்புகளைக் கொண்டு, இவருக்கும் உங்களுக்கும் ஏதும் வித்தியாசம் உண்டோ என்று பாருங்கள்.

1. "பாவம் செய்வதைப் பார்க்கிலும் சாகிறது மேல்." இது இவருடைய வாய்ப் பாடங்களில் ஒன்று. உங்களுக்கும் இது தானா குறிக்கோள்!

2. இவர் ஐந்து வயதில் பூசை மந்திரம் படித்து, பூசைக்கு உதவக் கற்றுக் கொண்டார். ஐந்து வயதில் ஆள் மிகவும் கட்டையர் தானே. புத்தகத்தை மறுபுறம் மாற்றவேண்டிய நேரம் வந்ததும் குருவானவர் பீடத்து விளிம்பில் புத்தகத்தை இழுத்து விடுவார். அப்போது வெகு மகிழ்ச்சியோடு அதை மறுபுறம் கொண்டுபோய் வைப்பாராம். உங்களில் எத்தனைபேர் நாட் பூசைக்குப் போகிறீர்கள்? எத்தனை பேருக்குப் பூசைக்கு உதவத் தெரியும்?

3. ஒருமுறை இருசிநேகிதர் நெடுநேரம் தங்களுள் பேச்சுப்பட்டும், கல்லால் எறிபட்டும், சண்டையிட்டும் கொண்டிருந்தார்கள். அப்போது சவியோ தனது கழுத்தில் கட்டியிருந்த குருசைக் கழற்றிக் கையில் உயரப் பிடித்துக் கொண்டு: "இந்தக் குருசைப் பார்த்துக் கொண்டு உரத்த சப்தமாய்ச் சொல்லுங்கள்; யேசு தம்மை வாதித்தவர்களுக்குப் பாவ மன்னிப்புக் கொடுத்தார்; பாவியாகிய நானோ பழிவாங்கப் போகிறேன்; இனி, நீங்கள் என்மேல் முதற் கல்லை எறியலாம்" என்றார். அப்பொழுது சண்டை யிட்ட இரு கூட்டாளிகளும் கல்லுகளை அப்புறம் எறிந்து விட்டார்கள். சவியோ தனது வீரத்துவ—கிறீஸ்துவ பிறர் சிநேகம் கலந்த செயலால் அவர்களை ஒற்றுமைப் படுத்தினார். தடவிப் பாருங்கள், உங்கள் கழுத்திலும் குருசு இருக்கிறதா? என்று. சண்டை யிட்ட எத்தனை பிள்ளைகளை நீங்கள் சமாதானப் படுத்தி இருக்கிறீர்கள்? சுபம்.

உங்கள் அன்புள்ள, அண்ணா.

## அர்ச். பிளெய்ஸ்

அநேக வருடங்களின்முன் பிளெய்ஸ் என்பவர் சஞ்சரித்து வந்த நாட்டில் வேதவிரோதிகளான பொல்லாத மனிதர் சிலர் வசித்தனர். அவர்கள் கிறீஸ்தவர்கள் எங்கேஇருக்கிறார்கள் என்று தேடிப் பிடித்து அவர்களைக் கொலை செய்து வந்தனர். இதை அறிந்த பிளெய்ஸ் காட்டுக்கு ஓடிப்போய் மலைகளிடையே இருந்த ஒரு குகையுள் ஒளித்துச் சீவித்து வந்தார்.

காட்டு மிருகங்கள் அந்தக் குகைக்கு வந்து அவரைக் கண்டும் அவருக்கு ஒரு தீங்கும் செய்யாது அவரது காலடியிலே படுத்து உறங்குவது வழக்கம். அவைகளுக்கு நோய் கண்டால் அவர் அவற்றைக் குணப்படுத்தி விடுவார். இவ்வாறு இருக்கும்போது அந்தநாட்டை ஆண்டுவந்த தேசாதிபதி கிறீஸ்தவர்களை வதைக்க ஓர்உபாயஞ் செய்தான். மிருகங்களை அடைக்க ஓர் கூடு செய்வித்தான். அந்த மிருகங்கள் அடைக்கப் பட்ட கூட்டுக்குள் கிறீஸ்தவர்களையும் ஒருமிக்க விட்டு அவைகட்கு இரையாக்குவான். இவ்வாறே அநேகம் கிறீஸ்தவர்கள் கொல்லப் பட்டார்கள்.

ஒருநாள் அந்தத் தேசாதிபதி காட்டு மிருகங்களைப் பிடித்து வரும்படி சொல்லித் தனது சேவகரை அனுப்பினான். அவர்களோ காடெங்கும் அலைந்து திரிந்தும் ஒரு மிருகமாவது அகப்படவில்லை. களைப்புடன் மாளிகைக்குத் திரும்பினர். திரும்பும் வழியில் ஒரு குகையின் அண்மையில் ஓர் சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்டனர். உடனே குகைக்குட் சென்று பார்த்தனர். அங்கே பிளெய்ஸ் என்பவரைச் சூழவாக் காட்டு மிருகங்கள் எல்லாம் நிற்பதைக் கண்டு, அவரையும் அவைகளுடன் பிடித்துச் சென்று தேசாதிபதியிடம் கையளித்தனர்.

அவர் கிறீஸ்தவர் ஆனதினால் மறியலில் அடைக்கப் பட்டார். ஒருநாள் இரவு மறியலில் இருந்தவர்களில் ஒரு சிறு பையனுக்கு தொண்டைக்குள் மீன்முள்ளுப்பொறுத்துக் கொண்டது. இவர் அந்த முள்ளை அப்பையனின் தொண்டையி லிருந்து வெளியே எடுத்து அவனைக் காப்பாற்றினார்.

சில நாட்களின் பின் பிளெய்ஸ் மறியலி லிருந்து விடுதலை பெற்றார். கடைத் தெருப் பக்கத்தில் வேலை செய்தார். ஆயினும் அவர் சீவன் நிலைக்கவில்லை. சில தினங்களில் அஞ்ஞானிகள் அவரைக் கொலை செய்து விட்டனர். அவர் இன்று மோட்சத்தில் தேவனுடன் மகிமையில் வீற்றிருக்கிறார்.

மாசிமாதம் 3-ந் திகதி திருச்சபை இவருடையதிருநாளைக் கொண்டாடி வருகிறது.

— M. J. M.



## ஞானச் செண்டு

தலைமை ஆசிரியர் கவனத்திற்கு:

எமது மேற்றிராணி ஆண்டவரின் குருத்துவ அபிஷேக வெள்ளி யூபிலி விழாவை முன்னிட்டுப் பாடசாலைச் சிறார்கள் ஒரு ஞானப் பூச்செண்டு தயாரிக்க வேண்டும் என்று மேற்றிராசன பரிபாலன சுவாமிகள் முன்னர் அறிவித்ததை நினைவூட்டுகிறோம்.

ஞானப் பூச்செண்டுக்குரிய குறிப்புகளை விபரமாய் அனுப்புமாறு தலைமை ஆசிரியரை விநயமாய் வேண்டுகிறோம்.

இதுவரை விபரம் அனுப்பிய பாடசாலைகள்:

1. சம்பத்திரிசியார் பெண்பாடசாலை, முல்லைத்தீவு.
2. றோ. க. க. பாடசாலை, முதலியாகுளம்.

## மூளைக்கு வேலை

[வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் பெரியோர்கள் சிலர் மேலே தரப்பட்ட வாக்கியங்களில் மறைந்து நிற்கின்றார்கள். அவர்களைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.]

1. இலங்கையில் உள்ள மலைகளில் பெரியது பேதுருத்தாலகால மலை.
2. ஈ சாக்கில் மொய்த்து விடும் போல் இருக்கிறதே.
3. தங்கை புனித சிலியையோ புடையன் தீண்டியது.
4. சிங்கள மக்கள் பலாக்காயின் கறியை விரும்பி உண்பர்.
5. எலியா சுசீலாவின் சீலைகளை இவ்விதம் வெட்டியது.
6. யூத குலமோ சேசுவின் பழியால் இன்றைக்கும் அலைகிறது.
7. நெல் உவர்த்தரையிலே விளையுமா?
8. அவள் ஒரு சேத்திரத்தில் தங்கினாள்.

விடை: 1. பேதுரு 2. ஈசாக் 3. யோபு 4. காயின் 5. எலியாசு 6. மோசேசு 7. லேவி 8. சேத்.

— வேந்து

## சூரியன் உதித்தான்

'ஜெயம்'

1
சூரிய னிங் குதித்தான்
சுடர்க் கரம் விரித்தான்
பாரி லொளி படைத்தான்
பாழு மிருள் துடைத்தான்

2
காகங் களைக் கலைத்தான்
கான முல்லை பறித்தான்
சேவல் குரல் கொடுத்தான்
செங்க மலம் சிரித்தாள்

3
சோலை தனிற் குதித்தான்
சுற்றி லும்பூ விதைத்தான்
ஆழ்கட லிற் குளித்தான்
அங்கு தங்கம் குவித்தான்

4
கோவில் மணி அடித்தார்
கூடியங் கு துதித்தார்
பாலரும் கண் விழித்தார்
பாடங்க ளைப் படித்தார்

## மூன்று ஆட்கள்

சருவேசுரன் மூன்று ஆட்களாய் இருந்தாலும் ஒரு சருவேசுரன் மாத்திரம் இருக்கிறார் என்று திவ்விய இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்குப் பின் திருச்சபை எமக்கு நினைவூட்ட விரும்புகிறது.

அதற்காகத் திவ்விய யேசு மோட்சத்திற்கு எழுந்தருளுமுன் சீஷருக்குக் கொடுத்த கட்டளையைஅது திருப்பிக் கூறுகிறது. "நீங்கள் போய் உலகம் எங்கும் பிரசங்கஞ் சொல்லி, பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்து சாந்துவுடையவும் நாமத்தினாலே ஞானஸ்நானங் கொடுங்கள்."

பரிசுத்த ஆவியின் ஐக்கியத்திலே, சுதனாகிய கிறீஸ்து மூலமாய் நித்திய பிதாவுக்குச் சகல மகிமையும் உண்டாவதாக.

(ஞாயிறு சுவிசேஷத்தைக் கவனிக்கவும்)

## "பெனடிற்றைப் போய்ப்பார்"

மனதுக்கு இன்பம் ஊட்டும் வசந்த காலத்தில் ஓர்நாள் பெனடிற் என்னும் ஓர் இளைஞன் மிகுந்த உற்சாகமாய் ஓர் மலைமேல் தாண்டித் தாண்டி ஏறிச் செல்கின்றான். இனிய கீதங்களைப் பாடிக் கொண்டே ஏறுகிறான். இடையில் சற்றே தரித்து நின்று கீழே பார்க்கிறான். அங்கே இருந்த நீரோடை ஒன்றையும், அதன்பக்கமாய் அழகான பள்ளத்தாக்கு ஒன்றையும் காண்கிறான். பின்னர் அங்கு நின்றுவிடாது இன்னும் மேல்நோக்கி ஏறியபோது அந்த மலையின் உச்சிக்குச் சமீபமாக இருந்த ஓர் பெரிய குகையை அடைந்து அதற்குள் சென்றான். அங்கே முழந்தாள் இட்டான். தனக்கு இந்த நல்ல இருப்பிடம் தந்த தேவனுக்குத் தோத்திரஞ் சொன்னான்.

பதினான்கு வயது நிரம்பிய இளைஞன் றோமை நகரிலே மற்றப் பையன்களோடு பாடசாலை சென்று அவர்களுடன் விளையாடியும் வந்தான். ஆனால், அவர்கள் செய்யும் தவறுகளையும், பாவங்களையும் அவன் காணும் போது, விளையாடும் இடத்தை விட்டு அகன்று, கோவில் சென்று அவர்களுக்காகத் தேவனிடம் மன்னிப்புக் கேட்டு மன்றாடுவான்.

(அடுத்த பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகில் இருக்கும் எதுவும் உண்மையான இன்பத்தைத் தரக்கூடியது அல்ல என்பதை அவன் நன்ருய் உணர்ந்து, நித்திய இன்பத்தைத் தரும் மோட்ச வீட்டுக்குச் செல்லத் தனது ஆத்துமத்தை ஆயத்தப் படுத்தவேண்டும் என்று மனதில் எண்ணினுன். அதற்காக அந்தப் பெரிய பட்டணத்தை விட்டு, மலைச் சாரலை நாடிச் சென்றுன். அங்கே தான் கண்ட மலைக் குகையில் தேவனுடன் தனிமையாகச் சீவிக்கலாம் என்று நினைந்து சந்தோஷப் பட்டான்.

அந்த மலைக்குப் பக்கத்தில் வசித்துக் கொண்டு வந்த ஒரு குருவானவர் அல்லாது வேறு எவருமே பெனடிற் இருந்த புதிய மனையை அறியவில்லை. இந்த நல்ல குருவானவரே தினமும் பெனடிற்றுக்குச் சொற்ப உணவு கொடுத்துவந்தார். பிந்தமலையில்ஏறஇறங்க அவரால்முடியவில்லை. அதனுல் ஒரு நீண்ட கயிற்றில் கட்டப் பட்ட சிறு கூடை ஒன்றில் அப்பத் துண்டுகளை வைத்து, அதில் ஒருசிறு மணியையும் கட்டிக் கீழே இறக்கி விடுவார். மணிச் சப்தம் கேட்கும் போது பெனடிற் எழுந்துபோய்த் தனது உணவை எடுத்துக் கொள்வார். மூடுபனி, மழைகாலத்தில் அந்தக் குருவானவர் வெளியே சென்று உணவு தேட முடியா திருந்தார். ஆகையால், பெனடிற்றும் உணவின்றிப் பக்கத்தில் இருந்த காட்டுப் பழங்களை உண்டு, நீரோடையின் நீரைப் பருகி வருவார். மூன்று வருடமாகப் பெனடிற் அந்தக் குகையிலே வசித்து வந்தார்.

செபஞ் செய்வதிலும், தேவ துதிகளைப் பாடுவதிலும் நாள் முழுவதும் செலவிடுவார். இரவிலே அதிகம் சொற்ப நேரம் மாத்திரம் அந்தக் கற்பார்த் தரையில் படுத்து உறங்குவார்.

தேவனும் அவரது செப வாழ்க்கையில் பிரியங் கொண்டு ஒருநாள் பட்டணத்துக்குச் சமீபமாக வசித்த குருவானவர் ஒருவருக்குக் காட்சி தந்து, "பெனடிற்றைப் போய்ப் பார்" என்றுர். இச்சம்பவம் விரைவிலே மற்றவர்களுக்கும் தெரிய வந்து அவர்களும் அவரிடம் சென்று தங்களுக்காக மன்ருட வேண்டும் என்று அவரைக் கேட்கத் தொடங்கினுர்கள்.

அவரது பரிசுத்த சீவியத்தில் பிரியங் கொண்ட சிலவாலிபர் அவரிடம் சென்று, தாங்களும் அவரைப் போலச் சீவிக்க விரும்புவதாகத் தெரிவித்தனர். அவரும் எல்லோரையும் ஏற்றுத் தமது குகைக்கு அழைத்துப் போய் எப்படிச் செபம் பண்ணவேண்டும் என்று அவர்களுக்குப் படிப்பித்தார். அவர்களும் ஓர் சந்நியாச மடத்தை ஆரம்பித்தனர். அதிகம் விரைவிலே சந்நியாசிகள் தொகை அதிகரிக்கவே, மற்ருேர் கட்டிடம் அம்மலையில் அமைக்க வேண்டி வந்தது. இவ்விதமாக அர்ச். ஆசீர்வாதப்பரின் சந்நியாச மடம் தோன்றவே, ஒவ்வொரு வருடமும் உலகின் பல பாகங்களிலுமிருந்து இளம்வாலிபர் அநேகர் தேவனுக்குத் தொண்டுசெய்து, செபச் சீவியம் நடத்த விரும்பி இந்த மடத்தில் சேர்ந்து துறவற வாழ்க்கையை மேற்கொண்டு அர்ச். பெனடிற்றின் சீவியத்தைப் பின்பற்றி வருகிருர்கள்.

— எம். ஜெயம்

## சின்ன மலர்

பிரான்சிலே இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்குமுன் ஓர் இளம் கன்னிகை ஒரு மடத்தில் இறந்தாள். அவள் இறந்த 25 ஆண்டுகளுக்குப் பின் பதினொராம் பத்திநாத பாப்பானவர் அவளுக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் சூட்டினுர். அவள்தான் யேசுவின் சிறிய புஷ்பம்—சின்னமலர் அர்ச். தெரேசம்மாள்.

இவள் மரிக்கச் சிலதினங்களின் முன் ஒரு வாக்குப் பண்ணியிருந்தாள். அது என்ன? "பூமியில் உள்ளவர்களுக்கு நன்மை செய்வதே மோட்சத்தில் எனது ஓயாத அலுவலாய் இருக்கும்" என்பதே. அப்படியே அவள் தனது வாக்கை நிறைவேற்றி வருகிருள். அவளின் உதவியைக் கேட்பவர்களுக்கு அதிசயமான விதமாய் அவள் உபகாரம் புரிந்து கொண்டு வருகிருள்.


அவள் தனது சீவிய காலத்தில் குருமாருக்காக விசேஷமாய் மன்ருடி வந்தாள். அதே வேலையை அவள் மோட்சத்திலும் இப்பொழுது செய்து கொண்டு வருகிருள். அதனுல் பரிசுத்தபாப்பானவர் அவளை வேதபோதக நாடுகளின் பாதுகாவலாளியாக நியமித்தருளினுர்.

அர்ச். பிரான்சீஸ் சவேரியாரைப் போலவே இவளும் வேதபோதக நாடுகளின் பாதுகாவலாளி என்று அழைக்கப் படுகின்ருள்.

நாமும் இந்த அர்ச்சியசிஷ்டவள் தன்னிடம்விளங்கியதேவசிநேகம்,பிறர்சிநேகம், ஆத்தும வாஞ்சையை நமக்கும் அடைந்து தரும்படி அவளைப் பார்த்து மன்ருடுவோம்.

— ஜே. எஸ்.

# யுசெப்பெ சார்த்தோ



**சென்ற வைகாசி மாதம் 29-ந் திகதி முத். பத்தாம் பத்திநாதர் அர்ச்சியசிஷ்டர்கள் இடாப்பில் எழுதப்பட்டார் என்று அறிவீர்கள். அவருடைய சரித்திரத்தைச் சுருக்கமாகத் தருகிறேம். இம்முறை யுசெப்பெ சார்த்தோ என்ற நமது சுத்தவாளரின் பாலிய பருவத்தை விபரிக்கிறேம்.**

இத்தாலி தேசத்திலே வெனிஸ் மருதநிலத்தின் நடுநாயகமாய் விளங்குவது றீயெஸ் என்னும் சிறுபட்டினம். இப்பட்டினத்தின் சந்தைச் சதுக்கத்தில் நின்று வடக்கே பார்த்தால் கிறப்ப குன்று வான் முகட்டைத் தொட்டுக்கொண் டிருக்கக் காணலாம். வானத்தில் மேகக்கூட்டங்கள் இல்லாத வேளைகளில், அதேதிசையிலே வெகு தொலைவில் பனி படிந்து சூரிய வெளிச்சத்தில் சொலித்துக்கொண் டிருக்கும் திறென்ரைன் அல்ப்ஸ் சிகரந் தோன்றும்.

அப்படிப் பட்ட இயற்கை வளம் நிறைந்த இவ்விடத்தில் யுசெப்பெ (சூசையப்பு) சார்த்தோ பிறந்து, ஞானஸ்நானம் பெற்றுர். இவ்விடத்திலேயே ஆரம்ப கல்வியும் கற்றுர். "பெப்போ" என்பது அவருடைய செல்லப் பெயர்.

யுசெப்பெ ஓர் சாதாரண பையனுகவே விளங்கினுர். பகிடி, பரிகாசங்கள் பண்ணுவார். விளையாட்டுக்கு விரைவார். தறுகுறும்புக்கும் வீரர். மற்றவர்களிலும் பார்க்க அவரிடத்திலே படிப்பில் ஊக்கமும், தேவநேசமும், மாதாபக்தியும் குறிப்பாய் விளங்கின. அவர் காஸ்ரெல் பிறுங்கோவிலுள்ள பாடசாலைக்குப் போகும்பொழுதுதான் சப்பாத்தென்று போட்டு அறிந்தார். அதிகாலை ஐந்துமணிக்கு நித்திரை விட்டு எழுந்து விடுவார். அங்கே புரட்டாசி மாதத்திலும் அதிகாலையில் வெயில் அதிகம். வானத்தில் பொன்னிறம் புரண்டிருக்கும். உலகம் இளமை பூத்திருக்கும்.

அந்தச் சப்பாத்துகள் வாங்குவதற்குத் தாய் எவ்வளவு கஷ்டத்துடன் தையல்வேலை செய்து உழைத்திருக்க வேண்டும் என்று நினைக்கும்போது பெப்போ வுக்கு அழுகை வரும். 'அவைகளைக் காப்பாற்ற வேண்டும்' என்று தீர்மானித்தார். காஸ்ரெல் பிறுங்கோவுக்கு நான்கு மைல் தூரம் நடக்கவேண்டியிருந்த போதிலும், பெப்போ சப்பாத்துகளைக் கழற்றித் தோளில் தொங்க விட்டார். மாரிகாலம் வருகிற வரைக்கும் பாடசாலைக்கு வெறுங் காலாகவே நடந்து சென்றுர். அவர் நடந்துசெல்வதை மேலே படத்தில் பாருங்கள்.

## ஆனி மாதம்

**போதுக்கருத்து :—** பாவச்சுமையின்கீழ் வருந்துவோர் யேசுவின் திரு இருதயத்தினிடம் இரக்கமும், இரட்சணியமும் தேடும்படியாக வேண்டிக் கொள்வது.

## ஞானப்பூச்செண்டு?

## வத்திக்கான்

(சென்றவாரத் தொடர்ச்சி)

வத்திக்கானுக்கென்று தனிப்பட்ட தந்தி—தபால் போக்குவரத்துமுறையும், நாணயசெலாவாணியும், வானெலிநிலையமும், தூரக்காட்சி (Television) நிலையமும், புகையிரதநிலையமும், பொலிஸ் பந்தோபஸ்தும், நீதிமன்றங்களும் (சிவில், கிறிமினல் ஆகஇரண்டு) இருக்கின்றன. உலகின் பல்வேறுநாடுகளோடும் நேரடியானஉறவும், போக்குவரத்தும், வாணிபமும் வைத்துக் கொள்ள வத்திக்கானுக்கு உரிமையுண்டு.

42 நாடுகளோடு வத்திக்கான் அரசியல்உறவு கொண்டுள்ளது. ஸ்தானிகர்களைப் பரிமாறிக்கொண் டிருக்கிறது. இறுதியாக, சிலநாட்களுக்குமுன் ஏற்பட்டஉறவு ஈருன் அரசாங்கத்தோடு.

இருசாவிகளுக்குமேல் அமைந்த மும்மகுடஉருவமே வத்திக்கான் இராச்சியத்தின் கேடையசின்னம்.

நகர ஆட்சியை நடைமுறையில் கவர்னர்ஒருவர் கண்காணித்துவருகின்றுர். பலதுறைகளிலும் பலர் அவருக்கு உதவிபுரிகின்றனர். நகரில் ஒழுங்கீனம் நிகழாது பார்த்துக்கொள்ளும் பொறுப்பு சேவகர்களுடையது. சுவிற்சர்லாந்து தேசத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட படைவீரர்அடங்கிய "சுவிஸ்காட்" என்ற காவலர்குழு நகர பாதுகாப்பைக் கவனித்துக்கொள்கின்றது. விழாச்சிறப்பிற்கும், அரண்மனை அழகிற்கும், மரியாதைப்பணிகளுக்கும் "நோபிள்காட்", "பலற்றைன்காட்" என்ற காப்பாளர்குழாங்கள் இருக்கின்றன. இந்தக்காவலர், காப்பாளர்களுடைய உடையழகும், முடியழகும், ஆயுதங்களின்ஒளியழகும் கண்ணைக் கவர்வன.

நகரைச்சுற்றிலும் உயர்ந்த சுவர் செல்கின்றது. முகப்பிலே நகரின்ஒரு பகுதியாய், அர்ச். இராயப்பரின் போாலயமும், அதன்வளாகமும் அமைந்துள்ளன. கலைவளம்சிறந்த — விழிகளுக்கு விருந்தளிக்கும் பேரெழில்மிக்க பிரமாண்டமான இவ்வாலயம் கிழக்கு நோக்கி நிற்கின்றது. ரோமைநகரையும், கீழ்த்திசைநாடுகளையும் பார்த்த வண்ணம் வானளாவி உயர்ந்துநிற்கின்றது. அதற்கு இடதுபக்கத்தில் பல அடுக்கு மெத்தைகளைக் கொண்ட அரண்மனைக்கட்டடங்கள் இருக்கின்றன. வத்திக்கான் இராச்சியம் உலகிலேயே மிகச்சிறிது. ஆனுல், வத்திக்கான் அரண்மனை உலகிலேமிகப்பெரிது. இவ்வரண்மனையின் உறுப்புக்கள் பல. அவையாவன: பாப்பரசரின் உயர்ந்த மாளிகை, கலைமாடங்கள் (Raphael's Rooms), சித்திரகூடங்கள் (Picture Gallery), சிற்ருலயங்கள், (சிறப்பாகப் பாப்பரசரின் சிஸ்றைன்தேவாலயம்), உலகப்பிரசித்திபெற்ற பொருட்காட்சிச்சாலைகள், புசதகசாலை, பலதரப்பட்ட முற்றங்கள், சேவகரும் காவலரும் தங்கியிருக்கும் படைத்தலங்கள். இவ்வாறு வத்திக்கான்அரண்மனையில் மட்டும் 1,500 அறைகளும், கூடங்களும், நடைகளும், ஆலயங்களும், 20 முற்றங்களும் உள்ளன. இவைகள் ஒவ்வொன்றையும்பற்றி ஒருநீண்டகட்டுரை வரையலாம். இவையன்றி வத்திக்கான்நகரத்தில் இன்னும்பல கட்டடங்கள்உள்ளன. அர்ச். அன்னம்மாளின் பங்குக்கோவில், புத்தகநிலையம், அதாவது வத்திக்கான் அச்சகம் வெளியிடும் புத்தகங்களின் விற்பனைநிலையம், தபால்நிலையம், அர்ச். இராயப்பரது போாலயத்தின் பின்புறத்திலிருக்கும் கவர்னர்மாளிகை, எத்தியோப்பியர் அல்லது அபிசீனியர்களுக்கென்று தனிப்படக்கட்டப்பட்டுள்ள குருமடம், புகையிரதநிலையம், உயர்ந்தவேலைப்பாடுகளையும், விலைமிக்க கருவிகளையும் கொண்ட தந்தி, வானெலிநிலையங்கள். இவற்றிற்கு இடையிடையே அழகிய பசும்புற்றரைகளையும், நறுமணப பூச்செடிகளையும், அபூர்வமரவகைகளையும், செயற்கைநீரூற்றுக்களையும் கொண்ட தோட்டங்கள் அல்லது பூங்காக்கள், வளைந்துவளைந்து மேடுபள்ளங்களில் ஏறியும்இறங்கியும் செல்லும்வீதிகள். இவையாவும் 109 ஏக்கர் நிலப்பரப்புக்குள் இருக்கின்றன.

உல்லாசப்பிரயாணிகள் உலகின்பல நாடுகளிலிருந்து—முக்கியமாக வசந்த காலத்தில் கும்பல்கும்பலாக, தேனீக்களின் கூட்டங்கள்போலச் சென்று குவிகின்றனர். அவர்கள் முதல்முதலாகக் கண்டுகளிக்கும்இடம் வத்திக்கான். சிறப்பாக அர்ச். இராயப்பரின் போாலயமும், வத்திக்கான் பொருட்காட்சிச்சாலைகளும். அவர்களைப்போல் நேரில் பார்த்து மகிழ்ந்தால்மட்டுமே வத்திக்கான்நகரின் பெருமையையும், பெருஞ்சிறப்பையும் சரிவரஉணரமுடியும்.

வத்திக்கானுக்குவெளியே ரோமையிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் பாப்புமார்களால் முற்காலத்தில் எழுப்பப்பட்டு அவர்களின்பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ள கோட்டைகளுக்கும், மாளிகைகளுக்கும், மண்டபங்களுக்கும், கலைச்சின்னங்களுக்கும், சிற்பங்களுக்கும் கணக்கேயில்லை. அவற்றில் ஒருசிலமட்டுமே இன்று வத்திக்கான் இராச்சியத்துக்குச் சொந்தம்.

[டி. எஸ். ஞானசாமி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்புத மாற்றம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சிநேகிதர்களையும் விட்டகன்ருன். செபித்தான், தபஞ்செய்தான். பாலியத்தில பாடசாலையை விட்டோடிக் கல்வியை மறந்தவன் இப்பொழுது படிக்க முற்பட்டான். ஆண்டவரைப் பற்றியும், மாதாவைப்பற்றியும், பக்தர்களைப்பற்றியும் எழுதப் பெற்ற புத்தகங்களை ஆவலுடன் படித்தான். புனிதலூயி மரிஎழுதிய "மெய்யானமாதாபக்தி" என்ற புத்தகம் அவனுடைய புதியவாழ்க்கையின் ஒளிகாட்டியாகவிளங்கியது. அந்தப்புத்தகம் காட்டியவழியில் அவன யேசுவுக்கும், அவர் திருத்தாயாருக்கும் அடிமையானன். தன்னை முழுமையும அவர்களுக்கு அர்ப்பணித்தான். தனக்கென ஒன்றும் வைத்துக்கொள்ளவில்லை. அவனும், அவனிடமிருந்த அனைத்தும் அவர்களுக்கேசொந்தம். அவனுடைய செபத்தின் பலன்களும், கிரிகைகளும் அவர்களுக்கேசொந்தம். இனி அவனை வழிநடத்திச்செல்பவர்கள் யேசுவும், அவரதுதிருத்தாயாருமே. அவர்கள்விரும்புவதை அவன் செய்வான். அவனைப்பற்றிய பொறுப்பாளிகள் இனிமேல் அவர்கள். அவன் அவர்களுடையஅடிமை.

அடிமைஎன்றதும் தன் மானத்திற்குக் குறைவுபோலத் தோன்றலாம். ஆனல், அவனுக்குத்தெரியும். பதினறு ஆண்டுகளாக அவன்மதுபானத்திற்கு அடிமை. பதினறு ஆண்டுகளாக அவன் அறியாமைக்கும், பாவத்திற்கும் அடிமை. பதினறுஆண்டுகளாக அவன் பசாசிற்குஅடிமை. இப்போதோ யேசுவுக்கும், மரியன்னைக்கும் தான் அடிமைஎன்பதில் அவனுக்கு எத்துணை மகிழ்ச்சி!

குடிப்பதில்லைஎன்று வாக்குறுதி கொடுத்தபின் "அடிமைப்பக்தன்" நாற்பதுஆண்டுகள் வாழ்ந்தான். இந்தநாற்பதுஆண்டுகளில் அவன்குடித்ததே இல்லை. உபவாசம்செய்யவும், ஒறுத்தல்செய்யவும் தெரிந்துகொண்டான். இரவில்நெடுநேரம் படிக்கவும், செபிக்கவும், பாடவும் தெரிந்துகொண்டான். அவன் அதிகாலையில் எழுந்திருப்பான். இரண்டுமணிநேரம் பிரார்த்தனைசெய்வான். முதற்பூசைக்குப் போவான். மழையோ, பனியோ, குளிரோ, எதுவோ அவன்கோயிலுக்குப் போவதில் குறுகிடுவதில்லை. மதுக்கடைதிறக்கும்வரை காத்திருந்தது ஒருகாலம். இப்போதுஅவன் கோயிற்கதவு திறக்கும்வரை காத்திருக்கின்ருன். அன்ருடம் திவ்வியபூசை காண்பான். திவ்வியநற்கருணை உட்கொள்வான். மற்தல்போத் பாடசாலைநாட்களை விரையமாக்கினன். இளமையையும் வீணக்கினன். தன்மானஉணர்ச்சியால் மனமாற்றம் உண்டானது. மாற்றத்திற்குப்பின் மாருதமன உறுதி. செபத்திலும், தபத்திலும் நிலைகொண்டு வாழ்வை வளமாக்கிக்கொண்டான். மதுவின் மைந்தன் மாதாவின் மைந்தனனன்.

## சுதேச வர்த்தமானம்

### பெருமழையும் பெருவெள்ளமும்

சென்ற அரைநூற்ருண்டு காலத்திலும் இல்லாதவிதமாகக் காலிநகரில் சென்றவாரம் பெருமழைபெய்து பெருவெள்ளம் ஏற்பட்டதாலே 400 வீடுகள் சேதமடைய, 2,500 மக்களுக்கு மேல் இல்லிடமற்று அந்தரிக்கின்ருர்கள். ஆலுமாரிஒன்று விழுந்தமையாலே அகப்பட்டு உயிரிழந்த 55 வயதுடைய ஓர்மனுஷியைத்தவிர வேறு எவருக்குமே சீவமோசம்ஏற்படவில்லை. வெள்ளத்தாலே கஷ்டத்துக்குள்ளான மக்களுக்கு உதவியாக மேயரின் கஷ்டநிவாரண நிதியிலிருந்து 15,000 ரூபா கொடுக்கக் காலிநகரசபை அனுமதியளித்திருக்கிறது. காலிப்பிரிவுமுழுவதிலும் இந்தவெள்ளத்தாலே 900 வீடுகள் சேதமடைந்திருப்பதாகவும், 1,900 மக்கள் அதனல் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தற்போது கண்டறியப்பட்டிருக்கிறது.

### இலவச கல்வித்திட்டசெலவு

பாடசாலைகளில் புதிதாகச்சேரும் பிள்ளைகளின்தொகை வருடந்தோறும் ஐம்பதினயிரத்துக்குமேல் அதிகரித்துக்கொண்டு வந்தபோதிலும் இலவச கல்வித் திட்டத்தின் செலவைத் தற்போதைய மட்டத்திலும்—அதாவது 14கோடியே 10 லட்சம் ரூபாவிலும்—குறைத்துப் பிடிக்கக் கல்விஅதிகாரிகள் எண்ணுகின்ருர்கள். அதற்கான நடவடிக்கைகளிலே ஒவ்வோர் ஆசிரியருக்கும் இருந்துவரும் மாணவர்களின் தொகைவீதத்தைக் கூட்டுவதும் ஒன்ருகும். அதன்படி, பாலர்வகுப்பு முதல் எட்டாம்வகுப்பு வரையிலே வகுப்புகளில் ஒவ்வோர் 30 வரவுக்கும் ஒருஆசிரியர் வீதமும், எட்டாம்வகுப்புக்கு மேற்பட்ட வகுப்புகளிலே ஒவ்வோர் 25 வரவுக்கும் ஓர்ஆசிரியர்வீதமும் நியமிக்கப்படுவர்.

### யப்பானிய நெற்செய்கை

அரசினர்கமங்களிலே கமத்தொழில் ஆசான்களாகக் கடமையாற்றி வருகிற திரு. எஸ். தம்பியையா, திரு. எஸ். எஸ். ரணதுங்கா, திரு. ரி. பி. டி. சொய்சா எனும்மூவரும் யப்பானியநெற்செய்கை முறைகளிலே பயிற்சிபெற்றுவருமாறு நேற்றைத்தினம் யப்பானுக்குச்செல்லுகின்ருர்கள். இப்பயிற்சிக்கென ஏற்படும் செலவுக்குப்16,000ரூபா அனுமதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் யப்பானில் ஆறுமாதகாலம் பயிற்சி பெறுவார்கள். இலங்கையிலே யப்பானிய முறைகள் கைக்கொள்ளப்படுமிடத்து வழமையிலே ஏக்கர்ஒன்றுக்கு 25 அல்லது 30 புசல் நெல்விளைவதற்குப்பதில் 75முதல் 80 புசல் வரையில் விளையுமாம்.


## ஞானப்பூச்செண்டு?


## விளம்பர விகிதம்

| | ரூ. ச. |
|---|---|
| நன்றியறிந்தஸ்தோத்திரம் ... | 2 00 |
| மரணஞாபகம் ஒரு அங். ... | 2 00 |
| ஓடர் நிசி ( Order Nisi ) | |
| இரண்டுமுறைக்கு ... | 10 00 |

மற்றும் விளம்பரங்களுக்குக் கடித மூலமாகவோ, அன்றேல் நேரிலோ மனுப்பண்ணிக்கொள்ளவும்.

மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்


# இன்ஷூரன்ஸ் ஆசாமிகள் இல்லாது போயிருந்தால்

வெகு சொற்பமானவர்களே ஆயுள் அஷ்யூரன்ஸ் பொலிஸிதாரராக இருக்கக்கூடும். ஆயிரக்கணக்கான விதவைகளும், அநாதைக் குழந்தைகளும் நிர்க்கதியாகப் பரிதவிக்கக்கூடிய நிலைமையிலிருப்பர். உங்கள் குடும்பத்திற்கு உடனடியாகப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்கு ஆயுள் அஷ்யூரன்ஸே நிச்சயமான வழியாகவிருப்பினும், ஆயுள் பொலிஸிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இன்ஸ்யூரன்ஸ் கந்தோர்கள் முன்புக்கு நீண்ட வரிசைகளில் ஜனங்கள் நின்றுகொண்டிருக்கவில்லை. காரணம் ஆயுள் அஷ்யூரன்ஸ் வாங்கப்படுவதல்ல, ஆனல் விற்கப்படுவதே.

இது எளிதில் ஊகிக்கக்கூடியது. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் பூரண ஆயுள் காலம் ஜீவிக்க முடியுமென்றே எதிர்பார்க்கிருன். எதிர்காலத்தில் அளவில்லாத நம்பிக்கையுள்ளவனகப் பிற்காலத்திற்கெனப் பாதுகாப்புத் தேடுவதை ஒத்தி போடுகிருன். ஏதாவது அபாயம் நேருவதானல், தனக்கல்ல, அயலான் ஒருவனுக்கே அவ்வாறு நேருமென நினைக்கிருன். எனினும், நாம் நினைப்பதுபோல் நன்மையே எப்பொழுதும் நேருவதில்லை. எனவே ஒரு மனிதன், மனைவி, குழந்தைகளின் நலனைப் பொறுத்த மட்டில் இன்ஸ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் இருப்பது பெரிய அதிர்ஷ்டம். இந்த ஏஜெண்டுகள் ஒருவரின் விருப்பையோ, வெறுப்பையோ பொருட்படுத்தாது உதவி புரியும் உண்மைநண்பர்களாக விளங்குகின்றனர்.

## சிலோன் இன்ஷூரன்ஸ்
### கம்பெனி லிமிட்டெட்,

தலைமை ஆபீஸ்:

69, இராணி வீதி — கொழும்பு.

Zeylon Iusurance Co. Ltd., 69, Queen St., Colombo


## மரணசங்கதி

யாழ்ப்பாணம், சந்தியோகுமையோர் கோவிலைச்சேர்ந்த கத்தோலிக்கமக்களில் ஒருவரும், காலஞ்சென்ற பெரியாருமான திரு. பிலிப்புப்பிள்ளை அவுரும்பிள்ளை அவர்கள் விருத்தாப்பியநோய் கண்டிருந்து அந்தியதேவதிரவிய அனுமானங்களைப் பெற்றுச் சென்ற 29-5-54 சனிக்கிழமை இறைவனடி சேரலாயினர். மரிக்கும்போது இவருக்குவயது 86. இவர் பாலியத்திலே சம்பத்திரிசியார் கல்லூரியில் கல்வி பயின்று, யாழ்ப்பாணம், சஞ்சூசைமாமுனிவர் அச்சகத்திலே பலவருடகாலம் ஓர்லிகிதராகக் கடமையாற்றிவந்தார். இவர் தேவபக்தி, குருபக்தியிற் சிறந்தவர். பக்திக்கூட்டங்களிற்சேர்ந்து அவற்றின்விருத்திக்காக அயராதுழைத்துவந்த காரணமாகக் காலஞ்சென்ற மெலிசன், யூலன்மேற்றிராணிமார்களால் பாராட்டப்பெற்றிருந்தார். யாழ்ப்பாணத்திலே பாலஉடையாரெனப் பிரபலமாக அறியப்பட்டவரின் புதல்வியான திருமதி எலிசபேத் ஞேசம்மாவை வாழ்க்கைத்துணைவியாகக் கொண்டு இனிதேஇல்வாழ்க்கை நடத்திச் சற்புத்திர பாக்கியத்தைப்பெற்று வாழ்ந்தார். இவருடையபுதல்வர்களில் ஒருவர் குருபதவிக்கு உயர்த்தப்பட்டிருக்கிருர். இவரது பௌத்திரர்களில்ஒருவர் சிவில்உத்தியோகஸ்தராய்த் தற்போது இலங்கைப்பிரதமரின் நிரந்தரகாரியதரிசிகளில் ஒருவராயிருந்து வருகிருர். இவரின்பூதவுடல் மறுநாள் ஞாயிற்றுக்கிழமைபிற்பகல் பெருந்திரளானமக்கள் கூடியசமூகத்தில் நல்லடக்கஞ்செய்யப்பட்டது.

R. I. P.

— போர்மோசாதீவிலே இருந்துவருகின்ற தேசியசீனஅரசாங்கம் பரிசுத்தஸ்தானத்தினிடமாகத் தனது ஸ்தானிகராய் டக்றர் ஹிஸியே ஷூ-கங் அவர்களை நியமனஞ்செய்திருக்கின்றது. இவர் கத்தோலிக்கர்அன்று. 1943-ம் ஆண்டு இவரே வத்திக்கானிடமாக முதலாவதுசீன ஸ்தானீகராலயத்தை ஏற்படுத்தினர். 1949-ம் ஆண்டு முதல் வத்திக்கானிலே சீனஸ்தானீகர் இருந்தவாவில்லை.

— இத்தாலியின் தென்பகுதியிலுள்ள பன்னருனே பட்டினத்திலே சுமார் நூறுகம்யூனிஸ்தர்கள் கம்யூனிஸத்திற்காக உழைப்பதில் தங்களுக்குள்ள தொடர்பை நிறுத்திக்கொண்டு, அதற்குஅறிகுறியாகச் சுத்தியலும், அரிவாளும் பொறிக்கப்பட்டிருந்த கொடிகளையெல்லாம் கிழித்தெறிந்து விட்டிருக்கிருர்கள். கத்தோலிக்கசேவைப் பத்திரிகையிலே இவர்களின்நாமங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 10-1954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org